மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

ஆகஸ்ட் 2020

தொடர்புக்கு : tamilmarxist@gmail.com

உள்ளடக்கம்:

சீனாவும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் – சில கேள்விகளும் பதில்களும்

பிரகாஷ் காரத்

கேள்வி: தொடர்ச்சியான பல நடவடிக்கைகளின் மூலம் சீனாவை இலக்கு வைத்து அதன் வளர்ச்சியை தடுத்து நிறுத்த ட்ரம்ப் நிர்வாகம் நீடித்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. உலகின் அமைதி, ஸ்திரத் தன்மை ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஆக்ரோஷமானதொரு சக்தி என சீனாவை சித்தரிக்கும் வகையில் சர்வதேச அளவிலான பிரச்சாரத்தையும் அமெரிக்கா நடத்தி வருகிறது. ஏன் இவ்வாறு நடக்கிறது? தனக்கு விரோதமான இத்தகைய பிரச்சாரத்தை சீனா எவ்வாறு காண்கிறது?

சீனாவிற்கு விரோதமாக ட்ரம்ப் நிர்வாகம் தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஒரு பின்னணி உள்ளது. சீனாவின் வலிமை அதிகரித்துக் கொண்டே வந்த நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலும், அதைக் கட்டுப்படுத்தி வைக்கும் வகையிலும் திட்டங்களை உருவாக்கி தனது முக்கிய எதிரி சீனாதான் என்று அமெரிக்கா 20 ஆண்டுகளுக்கு முன்னால் இலக்கு நிர்ணயித்தது. இந்தக்

கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே அமெரிக்க ராணுவ தலைமையகமான பெண்டகன் அமெரிக்க ராணுவப் படைகளை களமிறக்குவதற்கான திட்டங்களை தீட்டியதோடு, ஆசிய-பசிஃபிக் பகுதிக்கான போர்த்தந்திரம் ஒன்றையும் இறுதிப்படுத்தியது.

'ஆசியப் பகுதிக்கே முன்னிலை' என்ற கொள்கையை அமெரிக்க அதிபர் ஒபாமாவின் நிர்வாகம்தான் அறிவித்தது. அதன்படி அமெரிக்காவின் கடற்படையில் 60 சதவீத படைகள் ஆசிய-பசிஃபிக் பகுதிக்கு நிலைமாற்றப் பட்டன.

எனினும் அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் சீனா பொருளாதார ரீதியாக வலிமையடைந்ததோடு, அதன் உலகளாவிய அணுகல் திறனும் பெருமளவிற்கு அதிகரித்தது.

ட்ரம்ப் அமெரிக்க அதிபரான உடனேயே, அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் சீன நாட்டுப் பொருட்கள் அனைத்தின் மீதான சுங்க வரியை அதிகரித்ததோடு சீனாவுடன் ஒரு வர்த்தக யுத்தத்தையும் தொடங்கினார். கூடவே அமெரிக்காவில் தயாராகும் நுண்ணிய சிப்கள் மற்றும் இதர கருவிகள் ஹுவேயி போன்ற சீன நாட்டைச் சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு கிடைக்காதவாறு செய்யவும் அவர் முயன்றார். இந்தப் பெருந்தொற்றுக் காலத்திலும் கூட கொரோனா வைரஸ் பரவுவதற்கு சீனா தான் காரணம் என அமெரிக்கா சீனாவின் மீதான தனது தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தியது. கூடவே சீன நாட்டு நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் ஆகியவர்களுக்கு எதிராகவும் பல்வேறு தடை உத்தரவுகளையும் அது விதித்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சி உலகை மேலாதிக்கம் செலுத்த முயற்சிக்கிறது என்ற பூச்சாண்டியைக் காட்டி ஹுவேயி நிறுவனத்தை புறக்கணிக்க வேண்டுமென தனது கூட்டாளிகளை சம்மதிக்க வைக்க அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது.

வலுவானதொரு பொருளாதார சக்தியாக சீனா உருவாகி வருவதாலேயே இவை அனைத்தும் நடைபெறுகின்றன. அமெரிக்காவிற்கு அடுத்து உலகத்தில் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியாக இன்று சீனா மாறியுள்ளது. அடுத்த பத்தாண்டு காலத்தில் அமெரிக்க பொருளாதாரத்தையும் விஞ்சிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மனிதர்களைப் போலவே செயல்படும் திறன் வாய்ந்த இயந்திரங்களை உருவாக்கும் தொழில்நுட்பமான ரோபோட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு போன்ற அதி நவீன தொழில்நுட்பங்களில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் கண்டு வரும் தொழில்நுட்ப வலுமிக்க ஒரு சக்தியாகவும் சீனா மாறிக் கொண்டு வருகிறது. உயர்தொழில்நுட்பத் துறையில் இதுவரையில்

ஏகபோகத்தை அனுபவித்து வந்த அமெரிக்காவிற்கு இந்த அம்சமே மிகவும் அச்சமூட்டும் விஷயமாக உள்ளது. கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதிலும் பரவத் தொடங்கிய பிறகு, இந்தப் பெருந்தொற்றினை வெற்றிகரமாக சமாளித்து, மிக விரைவாக பொருளாதாரத்தையும் மீட்கும் நடவடிக்கைகளில் சீனா இறங்கியுள்ளது. அதே நேரம் தனது நாட்டுப் பொருளாதாரத்திற்கு மிகப் பிரம்மாண்டமான வகையில் சேதத்தை ஏற்படுத்தியுள்ள பெருந்தொற்றினை சமாளிப்பதில் அமெரிக்கா தவறியுள்ள நிலையில் ட்ரம்ப்பிற்கு பயமேற்பட்டுள்ளது. அவரது இந்தப் பயம்தான் சீனாவின் மீதான கண்டனங்களும் தாக்குதல்களும் மீண்டும் ஒரு முறை அரங்கேற வழிவகுத்துள்ளது.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளில் எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது என்று இந்தப் பெருந்தொற்று வெடித்தெழுவதற்கு முன்பாகவும் கூட சீனா அரசு தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளது. பொருளாதாரத் துறையில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கு உருவாகும் எந்தவொரு மோதலும் உலகளாவிய பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றின் மீது மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அது தொடர்ந்து கூறி வந்துள்ளது. அதன் கண்ணோட்டத்தின்படி அமெரிக்கா ஒரு மேலாதிக்க சக்தியாக நடந்து கொள்கிறது என்பதே ஆகும். ஐரோப்பாவில் உள்ள பெரும் நாடுகளான ஜெர்மனி, ஃபிரான்ஸ், ஆசியாவில் உள்ள ஜப்பான் போன்ற நாடுகளுடன் வழக்கமான பொருளாதார உறவுகளை சீனா மேற்கொண்டு வருகிறது. அமைதியான வகையில் நிகழ்ந்து வரும் தனது முன்னேற்றம் வேறு எந்தவொரு நாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருக்காது என்றும் சீனா தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறது. தனது நாட்டை மட்டுமே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய பாதையை மேலும் மேலும் அதிகமான அளவில் ட்ரம்ப் பின்பற்றி வரும் அதே நேரத்தில் வெளிப்படையான வர்த்தகம் என்பது உலகிலுள்ள அனைத்து நாடுகளின் வளத்திற்கான வழியாக, அனைத்து நாடுகளுக்கும் உரியதாக இருக்கிறது என உலகமயமாக்கலை சீனா உயர்த்திப் பிடிக்கிறது.

தற்போது நிலவி வரும் மையமான முரண்பாடு என்பது ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலானது என நமது கட்சி எப்போதுமே கூறி வந்துள்ளது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக சீனா உருப்பெற்றுள்ள நிலையில் சோஷலிச சக்திகளின் வலிமையை எவ்வாறு நீங்கள் மதிப்பீடு செய்கிறீர்கள்? தற்போதைய உலகளாவிய சக்திகளின் பலாபலனில் சீனாவின் செல்வாக்கு எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடும் எனக் கருதுகிறீர்கள்?

ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான முரண்பாட்டினை மையமானதொரு முரண்பாடாகவே நமது கட்சி கருதுகிறது. சோவியத் யூனியன் சிதறுண்டு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிலவிய ஆட்சிகள் வலுவிழந்து உலக அளவில் சோஷலிச சக்திகளை பலவீனப்படுத்திய போதிலும்கூட, குறிப்பிட்ட சில நாடுகளில் தற்போது நீடித்து வரும் சோஷலிசமானது பொருளாயத அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு முரணான ஒன்றினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற உண்மை தொடர்ந்து நீடிக்கிறது. அனைத்து வகையிலும் வலுவானதொரு நாடாக சீனா தன்னை வளர்த்துக் கொண்டு, உலகத்தில் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக அது மாறியுள்ள சூழ்நிலையே மிகவலுவான ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவிற்கு சவாலான ஒன்றாக மாறியுள்ளது. இத்தகையதொரு சூழலில் இருந்துதான் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான மோதல் உருவாகியுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார, போர்த்தந்திர ரீதியான அதிகாரம் நீண்ட காலமாகவே சரிந்து வரும் அதே நேரத்தில் சீனா தனது வலிமையையும் செல்வாக்கையும் தொடர்ந்து உறுதியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது என்ற பின்னணியில்தான் அமெரிக்க - சீன மோதல் என்பது நடைபெறுகிறது. உலகத்திலுள்ள 60க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களை இணைத்துக் கொண்டுள்ள பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேடிவ் (பிஆர்ஐ – பண்டைக் காலத்தில் சீனாவின் பட்டு வர்த்தகர்கள் தரை வழியாகவும், கடல் வழியாகவும் பயணித்த பாதையை மீண்டும் உருவாக்கும் நோக்கத்துடன் ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா கண்டங்களைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட நாடுகளின் வழியாக புதிய நெடுஞ்சாலைகள், கடல் வழிகள் ஆகியவற்றின் மூலம் இந்த நாடுகளின் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது; அதன் மூலம் சீனாவின் வர்த்தக உறவை மேம்படுத்துவது என்ற நோக்கத்துடன் அந்த நாடுகளின் ஒப்புதலுடன் சீனா மேற்கொண்டுள்ள (கடல்வழி) பாதை மற்றும் (நெடுஞ்) சாலை திட்டம் – மொ-ர்) சீனாவின் பூகோள ரீதியான, அரசியல் ரீதியான வீச்சு அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதற்கான வலுவான வெளிப்பாடாக அமைகிறது.

பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் அமெரிக்க-சீன நாடுகளுக்கு இடையிலான இந்த மோதல் என்பது சர்வதேச அரசியலின் தீர்மானகரமான, முக்கியமான ஓர் அம்சமாக இருக்கும். புதியதொரு பனிப்போர் உருவாகி வருகிறது என்ற பேச்சு வெளிப்படத் தொடங்கியுள்ள போதிலும் கடந்த நூற்றாண்டில் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நிலவிய மோதலைப் போன்றதாக இதைச் சித்தரிப்பது பொருத்தமானதாக இருக்காது. அந்த நேரத்தில் ஏகாதிபத்திய முகாம் என்பது பல நாடுகளை

உள்ளடக்கிய அமெரிக்காவின் தலைமையிலான ஒரு குழு என்பதாக இருந்தது. மறுபுறத்தில் சோவியத் யூனியன் தலைமையில் சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் இருந்தன. அதே போன்று அப்போது சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே கணிசமான பொருளாதார உறவுகள் என்று எதுவும் நிலவவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் இன்றைய நிலைமை என்பது முற்றிலும் மாறானதாகும். அமெரிக்காவுடன் மட்டுமின்றி அதன் நேட்டோ கூட்டாளி நாடுகள் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் கூட சீனா விரிவான பொருளாதார உறவுகளை மேற்கொண்டு வருகிறது. அமெரிக்காவின் மிகப்பெரும் வர்த்தகக் கூட்டாளியாகவும் சீனா விளங்குகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த பல நிறுவனங்களும் சீனாவில் மிகப்பெரும் முதலீடுகளை செய்துள்ளன.

அதேபோன்று அமெரிக்காவின் தலைமையில் அல்லது சீனாவின் தலைமையில் நாடுகளின் குழுக்கள் என்பதும் இப்போது இல்லை. சீனாவிடமிருந்து 'விலகிக் கொள்வது' பற்றி அமெரிக்கா பேசி வந்தாலும் கூட, அமெரிக்காவினாலோ அல்லது அதன் கூட்டாளி நாடுகளாலோ அவ்வாறு செய்வது எளிதான ஒன்றல்ல. அமெரிக்க-சீன மோதல் அதிகரித்து வரும் பின்னணியில் சீனாவுடனான பொருளாதார உறவுகள் தொடர்ந்து நீடிக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே வெளிப்படையாகவே தெரிவித்து விட்டது. ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளைப் பொறுத்தவரையில், இந்தப் பிராந்திய குழுவைச் சேர்ந்த நாடுகளின் மிகப்பெரும் வர்த்தகக் கூட்டாளியாக சீனா தொடர்ந்து இருந்து வருகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில் சீனாவை கட்டுப்படுத்தி வைப்பதற்கான அமெரிக்காவின் முயற்சிகள் அமெரிக்காவில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள வலதுசாரி சக்திகள் விரும்பிய வகையில் உருவாக இயலாது. 'இந்திய-பசிஃபிக்' பகுதி என்று அழைக்கப்படும் இந்திய பெருங்கடலையும் உள்ளிட்ட பகுதியில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் போர்த்தந்திர ரீதியான, ராணுவ ரீதியான முஸ்தீபுகள் இந்தப் பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கவே வழிவகுக்கும்.

எனவே அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் அதிகரித்து வரும் மோதலை ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் பின்னணியில்தான் காண வேண்டும். சோவியத் யூனியன் சிதறுண்டு போனதற்குப் பிறகு வர்க்க சக்திகளின் பலாபலன் என்பது ஏகாதிபத்தியத்திற்கு சாதகமான ஒன்றாக மாறியுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தே வருகிறது. எனினும் சோஷலிச சீனாவின் அதிகரித்துக்

கொண்டே வரும் வலிமையானது எதிர்காலத்தில் வெளிப்படவிருக்கும் முரண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தவும் செய்யும்.

ஏகாதிபத்திய தாக்குதலுக்கு பதிலடி தருகையில் ஒரு சில தருணங்களில் சீனா சமரசம் செய்து கொள்வதைப் போலத் தோன்றுகிறது. சமாதானபூர்வமான சகவாழ்வு குறித்தும் கூட சீன கம்யூனிஸ்ட் கட்சி பேசுகிறது. 1960களில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட சமாதானபூர்வமான சகவாழ்வு குறித்த திருத்தல்வாத கருத்துக்களை எடுத்துக் கூறி வந்ததையும் நாம் பார்த்தோம். இப்போது சீனாவும் கூட அதே பாதையில்தான் செல்கிறது என்று இதை எடுத்துக் கொள்ள முடியுமா?

இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையேயான சமாதானபூர்வமான சகவாழ்வு என்பது போன்ற கருத்தோட்டங்களை பற்றிப் பேசும்போது அதன் வரலாற்றுப் பின்னணியையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையே, அதாவது முதலாளித்துவம் மற்றும் சோஷலிசம் ஆகிய இரண்டு வேறுபட்ட சமூக அமைப்புகளுக்கு இடையே சமாதானபூர்வமான சகவாழ்வு என்ற கருத்தோட்டம் என்பது அடிப்படையில் தவறானதொரு கருத்தோட்டம் அல்ல. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இந்த சமாதானபூர்வமான சகவாழ்வு என்ற கருத்தோட்டத்தை உருவாக்கிய வழியைத்தான் நாம் விமர்சித்தோம். இந்த இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையே சமாதான பூர்வமான போட்டி, சமாதானபூர்வமான வகையில் சோஷலிசத்திற்கு மாறிச் செல்வது ஆகியவற்றோடு இணைந்த வகையில்தான் இந்த சமாதானபூர்வமான சகவாழ்வு என்ற கருத்தோட்டத்தை அது முன்வைத்தது. இந்த மூன்று கருத்தோட்டங்களைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சித்தது.

சோஷலிசம் என்பது வலுவானதொரு சக்தியாக இருக்கும் காலத்தில் சமாதானபூர்வமான சகவாழ்வு மற்றும் சமாதானபூர்வமான போட்டி ஆகியவற்றின் மூலம் சோஷலிசத்தின் மேன்மை நிரூபிக்கப்பட்டு விடும்; அதன் மூலம் சமாதானபூர்வமான சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான வழி திறக்கும் என்ற மாயையை அது பரப்பி விடுகிறது. இத்தகைய கருத்தோட்டமானது ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றின் அச்சுறுத்தல்களை குறைத்து மதிப்பிடுவதாக அமைந்து விடுகிறது. அதன் விளைவாக முதலாளித்துவ நாடுகளில் நடைபெற்று வரும் வர்க்கப் போராட்டங்களை அது புறக்கணித்து விடுகிறது. ஏகாதிபத்தியமும், முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களும் எந்தவொரு காலத்திலும் சோஷலிசத்தோடு இணக்கமாக இருந்து விட முடியாது என்பதை

அங்கீகரிக்கவும் இக்கருத்தோட்டம் தவறுகிறது. எனவேதான் இத்தகைய கருத்தோட்டங்களை நாம் திருத்தல் வாதம் என்று அடையாளப்படுத்தி விமர்சித்தோம்.

இன்றைய நிலைமை என்ன? நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு வர்க்க சக்திகளின் பலாபலன் ஏகாதிபத்தியத்திற்கு சாதகமானதாக மாறியுள்ளது. மீதமுள்ள சோஷலிச நாடுகளும் கூட சர்வதேச நிதி மூலதனத்தின் உலகளாவிய மேலாதிக்க சூழலையும், முந்தைய சோஷலிச நாடுகளுக்குள் மூலதனத்தின் அதிகாரத்தை மேலும் முன்னேற்றி, தனது உலகளாவிய மேலாதிக்கத்தை நிலைநிறுத்தத் தீவிரமாகப் பாடுபட்டு வரும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்கொள்ள வேண்டிய தற்காப்பு நிலையில்தான் இருந்து வருகின்றன.

இத்தகையதொரு சூழ்நிலையில், இரு வேறுபட்ட சமூக அமைப்புகளுக்கு இடையே சமாதானபூர்வமான சகவாழ்வின் முக்கியத்துவத்தை சீன கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துவது சரியான ஒன்றே ஆகும். ஏகாதிபத்தியத்துடன் ஒரு மோதலில் ஈடுபடுவதற்குப் பதிலாக, தனது உற்பத்தி சக்திகளை வளர்த்தெடுப்பதன் மூலம் தனது பொருளாதாரத்தை மேலும் வளர்ப்பது;, மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேலும் உயர்த்துவது ஆகியவற்றில்தான் அது கவனம் செலுத்தி வருகிறது. அதன் ராணுவ, பாதுகாப்பு வலிமை உள்ளிட்டு அனைத்து வகையிலும் சீனாவை வளர்த்தெடுப்பதற்கான அமைதியானதொரு சூழலும் அதற்குத் தேவைப்படுகிறது. சோஷலிசத்தின் தொடக்க நிலையில்தான் சீனா உள்ளது என்றே சீன கம்யூனிஸ்ட் கட்சி வகைப்படுத்தியுள்ளது. ஐம்பது ஆண்டுக் காலத்திற்குள் அதனை ஓரளவிற்கு நல்ல வளமானதொரு நாடாக வளர்த்தெடுப்பது என்பதையே அது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இலக்கை அது தற்போது கிட்டத்தட்ட எட்டியுள்ளது. முக்கியமான முதலாளித்துவ நாடுகள் மற்றும் நிதி மூலதனத்துடன் விரிவான உறவுகளை அது ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாகவே இது சாத்தியமானது. இந்தச் செயல்பாட்டின் ஊடேயே, சந்தைப் பொருளாதாரத்தை அது வளர்த்தெடுத்துள்ளதோடு, தனியார் மூலதனம் வளரவும் அனுமதித்துள்ளது. ஏகாதிபத்திய மூலதனம் மேலாதிக்கம் செய்து வரும் ஓர் உலகத்தில் உற்பத்தி சக்திகள், தொழில்நுட்ப செயல் அறிவு ஆகியவற்றை வளர்த்தெடுக்க இத்தகைய செயல்முறை தேவைப்படுகிறது என்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தனித்துவமான சீன அடையாளங்களோடு கூடிய சோஷலிசத்தை கட்டுவது குறித்த மதிப்பீட்டை நாம் மேற்கொள்ளும்போது சீனா தொடர்ந்து முன்னேறி

வருவதையும், மிகப்பெரும் பொருளாதார சக்தியாக மாறியுள்ளது என்பதையும், வறுமையை அகற்றுவதில் மிகப்பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளது என்பதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஏகாதிபத்தியத்துடனான சமரசப் போக்கின் விளைவாகவே இந்த வெற்றி கிடைத்தது என இவற்றை எளிதாகப் புறந்தள்ளி விடக் கூடாது.

எனினும், சமாதானபூர்வமான சகவாழ்வின் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் அதே வேளையில், உலகின் எந்தப் பகுதியிலும் எந்தவொரு சோஷலிச அமைப்பும் வளர்ந்தோங்கி வருவதை ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் ஆகியவற்றால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதையும் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, ஏகாதிபத்தியத்தின் சதித்திட்டங்கள், சீர்குலைவு முயற்சிகள் ஆகியவற்றுக்கு எதிரான கண்காணிப்பு எப்போதும் இருந்து வருவது அவசியமாகும். ‘ஏகாதிபத்தியம்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதை சீன கம்யூனிஸ்ட் கட்சி இதற்கு முன்பு கைவிட்டிருந்தது. நமது கட்சியின் 20வது கட்சிக் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தத்துவார்த்த பிரச்சனைகள் குறித்த தீர்மானத்தில் இத்தகைய போக்கு ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தலை குறைத்து மதிப்பிடவும், ஒரு சர்வதேச கண்ணோட்டத்தை கைவிடுவதற்கும் வழிவகுக்கும் என்று நாம் எச்சரிக்கை செய்திருந்தோம்.

இறுதியாக, முன்னேற்றம் அடைந்ததொரு சோஷலிச நாடாக சீனா தன்னை எப்படி வளர்த்துக் கொள்கிறது என்பதையே உலக அளவில் சோஷலிசத்தின் எதிர்காலம் பெருமளவிற்குச் சார்ந்துள்ளது. அவ்வகையில் அவர்களது இத்தகைய முயற்சிகளுக்கான நமது ஒற்றுமையுணர்வையும், ஆதரவையும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சீன மக்களுக்கும் நாம் தெரிவித்துக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

தமிழில்: வீ. பா. கணேசன்

லெனின் 150:

லெனினும் இந்திய விடுதலை போராட்டமும்

பேரா. வெங்கடேஷ் ஆத்ரேயா

அறிமுகம்

தோழர் லெனின் பிறந்தது 1870 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி. அவர் பிறந்து 150 ஆண்டுகள் ஆகியும், அவர் 1924 ஜனவரி மாதம் மறைந்து 96 ஆண்டுகள் முடிந்தும், லெனின் அவர்களின் மகத்தான புரட்சிகர பங்களிப்பு நமது சமகால பிரச்சினைகளுக்கும் வெளிச்சம் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

மார்க்ஸ் – எங்கெல்ஸ் காலத்திற்குப் பின் மார்க்சீயத்தை முன்னெடுத்து சென்று சமகால பிரச்சினைகளை புரிந்துகொள்ளவும் புரட்சிகர இயக்கத்தை வலுப்படுத்தவும் ஆகப்பெரிய பங்களித்தவர் தோழர் லெனின். மார்க்ஸின் **மூலதனம்** நூல் முதலாளித்துவ உற்பத்தி அமைப்பு மூலதனத்தை மையப்படுத்தி ஒரு சில பெரும் மூலதனங்களின் ஆதிக்கத்திற்கு இட்டுச்செல்லும்; போட்டி முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக மாறும் என்பதை தெளிவுபடுத்தியிருந்தது. காலனி ஆதிக்கம் பற்றியும், வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் நடைபெற்றுவந்த வர்க்கப் போராட்டங்களின் மீது காலனி ஆதிக்க அமைப்பு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றியும் மார்க்ஸ்-எங்கெல்ஸ் இருவரும் மிகச்சரியான சில கருத்துக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக முன்வைத்தனர் என்பது உண்மை.

எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் இந்தியாவை நாசப்படுத்தியது பற்றியும் அதன் வீழ்ச்சிக்கான சாத்தியப்பாடுகள் பற்றியும் அற்புதமான இரு கட்டுரைகளை 1853இல் *நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன்* பத்திரிக்கையில் மார்க்ஸ் எழுதியுள்ளார். எனினும், காலனி ஆதிக்கமும் அதன் முரண்பாடுகளும் உலக முதலாளித்துவத்தின் மீது விளைவிக்கக்கூடிய தாக்கங்கள் பற்றி மார்க்ஸும் எங்கெல்ஸும் முழுமையாக ஆய்வு செய்யவில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் அது மையப்பிரச்சினையாகவும் இல்லை. மேலை நாடுகளின் முதலாளித்துவ வளர்ச்சிக்கும் அதன் ஆரம்ப மூலதன திரட்டலுக்கும் காலனிகள் ஆற்றிய பங்கை மார்க்ஸ் மூலதனம் நூலில் விவரிக்கிறார். ஆனால் காலனி நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியும் நவீன தொழிலாளி வர்க்கத்தின் சமூகப் பங்கும் துவக்க நிலையில் இருந்த பின்புலத்தில் இப்பிரச்சினைகள் மார்க்ஸின் படைப்புகளில் மைய இடம் பெறவில்லை. இந்த இடைவெளியை இட்டுநிரப்புவதில் தோழர் லெனினின் பங்கு மிக முக்கியமானது.

காலனி ஆதிக்கம் உலக முதலாளித்துவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றியும், இதற்கு இணையாக, காலனி நாடுகளில் உருவாகும் தேச விடுதலை இயக்கங்கள் முதலாளித்துவத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்க இயக்கத்தின் புரட்சிகர இயக்கத்திற்கு எவ்வளவு முக்கியமானவை என்பது பற்றியும் 1905இல் இருந்தே லெனின் தீவிரமாக சிந்தித்து வந்தார். இதனையொட்டி இந்தியாவிலும் சீனாவிலும், பொதுவாக ஆசிய கண்டத்திலும் ஏற்பட்டுவந்த அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை அறிந்துகொள்வதில் அவர் கவனம் செலுத்தி வந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கங்கள் மலர காரணமாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்து பல காலனி நாடுகளில் முதலாளித்துவம் வேகம் அடைந்த சூழலில் காலனிகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பிரவேசம் துவங்கி வளர ஆரம்பித்தது. இந்தியாவில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பிரவேசம் பற்றி 1908ஆம் ஆண்டில் ஒரு முக்கிய பதிவு செய்கிறார் லெனின். இதில் துவங்கி இந்த கட்டுரையில், லெனினுக்கும் இந்திய விடுதலை போருக்கும் உள்ள உறவின் ஒரு சில முக்கிய அம்சங்களை நாம் சுருக்கமாக பார்ப்போம்.

இந்தியா பற்றி லெனின்

ப்ரோலெதாரி (Proletary) என்ற, லெனினை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த, பத்திரிக்கையில் 1908 ஜூலை 23 இதழில், “*உலக அரசியலில் தீப்பற்றி பரவக்கூடிய பொருட்கள்*” என்ற தலைப்பில் லெனின் பின்வருமாறு எழுதுகிறார்:

“இந்தியாவில் தங்களது எழுத்தாளர்களுக்காகவும் அரசியல் தலைவர்களுக்காகவும் சாதாரண மக்கள் போராடத் துவங்கியுள்ளனர்........ இந்திய ஜனநாயகவாதியான திலக் மீது பிரிட்டிஷ் குள்ளநரிகள் விதித்துள்ள தண்டனையை எதிர்த்து வீதிகளில் ஆர்ப்பாட்டங்களும் பம்பாய் நகரில் வேலை நிறுத்தமும் நிகழ்ந்துள்ளன. இந்தியாவிலும் கூட உணர்வுபூர்வமான அரசியல் வெகு மக்கள் போராட்டத்தை நடத்தும் அளவிற்கு தொழிலாளி வர்க்கம் வளர்ந்துள்ளது. இதன் பொருள், ரஷ்ய பாணியில் இந்தியாவில் செயல்படும் பிரிட்டிஷ் சர்வாதிகார ஆட்சி அழிந்தே தீரும் என்பதாகும்.”

ஐரோப்பிய நாடுகளில் பாட்டாளி வர்க்க இயக்கங்கள் சில பின்னடைவுகளை சந்தித்த நேரத்தில் 1913இல் ‘ *பின் தங்கிய ஐரோப்பாவும் முன்னேறிய ஆசியாவும்* ’ என்ற தலைப்பில் லெனின் எழுதிய கட்டுரையில் அவர் கூறுகிறார்:

“ஆசியாவின் அனைத்துப் பகுதிகளிலும் ஜனநாயக இயக்கம் வளர்ந்து, விரிவடைந்து, வலுப்பெற்று வருகிறது……….பல கோடி ஆசிய உழைப்பாளி மக்களுக்கு நம்பத் தகுந்த நேச சக்தியாக வளர்ந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கம் உள்ளது. இதன் வெற்றியை உலகில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. இதன்மூலம் ஐரோப்பிய (உழைக்கும்) மக்களும் ஆசிய (உழைக்கும்) மக்களும் விடுதலை பெறுவார்கள்.”

அக்டோபர் புரட்சியின் தாக்கம்

1917ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நிகழ்ந்த புரட்சியில் கொடுங்கோலன் ஜார் மன்னனின் ஆட்சி ரஷ்ய மக்களால் தூக்கி எறியப்பட்டது. ஆனால் இந்த மக்கள் எழுச்சியின் தலைமை சமரச போக்கு கொண்ட கட்சிகளின் கையில் இருந்தது. நிலைமை வேகமாக மாறியது. அடுத்த சில மாதங்களில் தொழிலாளிகளும், விவசாயிகளும், போர்முனையிலிருந்து போரை நிராகரித்து பெரும் எண்ணிக்கையில் திரும்பி வந்துகொண்டிருந்த ராணுவ வீரர்களும், வீதிகளில் இறங்கி தங்கள் கோரிக்கைகளுக்காக போராடினர். இவர்களின் போராட்டத்திற்கு முற்றிலும் பொருத்தமான முன்னணிப் படையாக லெனின் தலைமையில் செயல்பட்டுவந்த ரஷ்ய சமூக ஜனநாயக கட்சி – போல்ஷெவிக் கட்சி - அமைந்தது. ரஷ்யா முழுவதும் தொழிலாளிகள், விவசாயிகள், ராணுவ வீரர்கள் இணைந்த ஜனநாயக அமைப்புகள் - இவை “சோவியத்” என்று அழைக்கப்பட்டன – மிக வேகமாக பரவின. 1917 அக்டோபர் மாதத்தில் போல்ஷெவிக் கட்சியின் தலைமையில் உழைக்கும் மக்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். ரஷ்ய சோசலிச குடியரசு பிறந்தது. ரஷ்யாவில் நிகழ்ந்த இந்த மகத்தான புரட்சி உலகெங்கும் பெரும் தாக்கத்தை விளைவித்தது. அக்டோபர் புரட்சியைக்கண்டு ஏகாதிபத்திய முதலாளித்துவ வல்லரசுகள் பதறின.

ஏன் பதறின? உழைக்கும் மக்களே ஆட்சி நடத்த முடியும்; வலுவான பொருளாதார, அரசியல், சமூக வளர்ச்சியை, திட்டமிட்ட சோசலிச பொருளாதார வளர்ச்சியை சாதித்து உழைக்கும் மக்களின் வாழ்வை பன்மடங்கு மேம்படுத்த முடியும் என்று பின்னர் உலகிற்கு நிரூபித்தது அக்டோபர் புரட்சி. இப்புரட்சியின் வர்க்கத்தன்மையை, இது முதலாளித்துவம் என்ற அமைப்பிற்கே விடப்பட்ட பெரும் சவால்; இப்புரட்சி நிலைத்துவிட்டால் முதலாளித்துவமும் முதலாளி வர்க்கமும் வரலாற்று போக்கில் காலாவதி ஆகிவிடுவர் என்பதை ஏகாதிபத்திய முதலாளித்துவம் உணர்ந்தது. எனவேதான், ஏகாதிபத்திய வல்லரசுகள் அனைத்தும் கைகோர்த்துக் கொண்டு, அக்டோபர் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிய முனைந்தன. 1918 மே மாதமே 14 ஏகாதிபத்திய முகாம் நாடுகளின் துருப்புக்கள் ரஷ்யாவிற்குள் நுழைந்து எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு ஆதரவாய் போரிட்டன.

ஆனால் செம்படை மக்கள் ஆதரவுடன் இரண்டு ஆண்டுகள் மிகக்கடுமையாக போரிட்டு வெற்றி பெற்றது. சோசலிச ரஷ்யாவை எளிதில் அழித்துவிடலாம் என்ற ஏகாதிபத்தியக் கனவு தகர்ந்தது. இந்த நிகழ்வுகள், ஏகாதிபத்தியத்தின் நுகத்தடியில் அடிமைப்படுத்தப்பட்டிருந்த காலனி நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. கொடுங்கோல் ஜார் மன்னனை வீழ்த்தி, ஏகாதிபத்திய நாடுகளின் படைகளையும் விரட்டி அடித்த சோசலிச ரஷ்யாவின் மீதும், போல்ஷெவிக் கட்சி மீதும், அதன் தலைவர் லெனின் மீதும் இந்தியா உள்ளிட்ட காலனி நாடுகளில் மிகப்பெரிய மரியாதையும் நேச உணர்வும் ஏற்பட்டன. இதன் ஒரு விளைவாக அன்றைய காலனி இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமென்ற வேட்கையுடன், இதனை செய்து முடிக்க சோசலிச ரஷ்யா சென்று அந்நாட்டின் தலைவர்களின் ஆலோசனையும் உதவியும் பெறலாம் என்ற என்ணத்துடன் துடிப்புமிக்க பல இந்தியர்கள் ரஷ்யாவிற்கு பயணித்தனர். (இவர்களில் பலரும் தேச பக்தர்கள் தான்; கம்யுனிஸ்டுகள் அல்ல.) சிலர் ரஷ்யா சென்று திரும்பி வருகையில் ஆஃப்கனிஸ்தான் தலைநகரான காபுலில் தங்கி பிரிட்டிஷ் காலனி அரசுக்கு எதிராகவும் இந்திய விடுதலைக்காகவும் செயல்பட்டனர். 1920ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காபுலில் செயல்பட்டுவந்த “இந்திய புரட்சியாளர்கள் அமைப்பு” தனது பேரவை கூட்டத்தில் இந்திய விடுதலைப்போருக்கு சோவியத் ரஷ்யா அளித்த ஆதரவுக்கும், காட்டிய நட்பு உணர்வுக்கும் நன்றி தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி லெனினுக்கு அனுப்பியது. இத்தீர்மானத்தை பெற்றுக்கொண்டு அளித்த பதிலில், லெனின் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக இந்திய மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு ரஷ்ய உழைப்பாளி மக்களின் முழு ஆதரவை தெரிவித்தார்.

லெனின் பாய்ச்சிய புத்தொளி

லெனின் புரட்சி பற்றித்தான் 24 மணி நேரமும் சிந்தித்துக்கொண்டிருந்தார் என்றால் அது மிகையாகாது. மார்க்ஸீய நிலைபாட்டில் நின்று, கள அனுபவங்களின் அடிப்படையில், சமகால அரசியல், சமூக, பண்பாட்டு, பொருளாதார தளங்களில் மார்க்ஸீய புரிதலை மேம்படுத்திக்கொண்டே இருந்தவர் லெனின். அந்த அடிப்படையில், அவர் வாழ்ந்த காலத்தில் ரஷ்யாவில் சோசலிச புரட்சி வெற்றிபெற தொழிலாளி-விவசாயி கூட்டு என்பது இன்றியமையாதது என்ற நிலைப்பாட்டிற்கு ஆழமான கள அனுபவமும் (குறிப்பாக, 1905 ரஷ்ய விவசாயிகளின் எழுச்சி) மார்க்சீய புரிதலும் லெனினை இட்டுச்சென்றது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஜனநாயக புரட்சியில் விவசாயிகளின் பங்கு பற்றி லெனின் முன்வைத்த புரிதல் மார்க்சீயத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல் கல் எனலாம்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் காலத்தில் முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள வலுவான தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் சோசலிச புரட்சி நிகழும் என்ற கருத்து மேலோங்கியிருந்தது. 19ஆம் நூற்றாண்டில் 1871 பாரிஸ் நகரிலும் வேறு சில தருணங்களிலும் தொழிலாளிவர்க்கம் அரசியல் ரீதியாக கிளர்ந்து எழுந்தது என்றாலும், சோசலிச புரட்சி நடத்தி ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள இயலவில்லை. பிரிட்டன், ஃப்ரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட வளர்ந்த ஐரோப்பிய நாடுகளில் சோசலிச சக்திகள் ஆட்சிக்கு வர இயலவில்லை. இப்பிரச்சினையை புரிந்துகொண்டு செயல்பட 1916 ஜூன் மாதத்தில் லெனின் எழுதி முடித்த, அவரது மிக முக்கியமான படைப்பான *‘ஏகாதிபத்தியம் - முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச (இறுதி) கட்டம்’* என்ற நூல் வழிகாட்டியது. இந்த நூல் ஏகாதிபத்தியம் உலகம் முழுவதையும் இணைத்துள்ள நிலையில், இந்த ஏகாதிபத்திய சங்கிலியின், இணைப்பின் பலவீனமான கண்ணியில் புரட்சி வெடிக்கக்கூடும் என்ற புதிய பார்வையை கொடுத்தது. இந்த புரிதலின் அடிப்படையில்தான் ‘ஏகாதிபத்தியம் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நுழைவாயில்’ என்று 1917 அக்டோபர் புரட்சிக்கு ஒரு ஆண்டுக்கு முன்பே லெனினால் கூற முடிந்தது. அன்றைய ஏகாதிபத்திய அமைப்பின் பலவீனமான கண்ணியாக இருந்த ரஷ்யாவில் நடந்த 1917 அக்டோபர் புரட்சிக்கு தலைமை தாங்கி லெனின் கூற்று சரியென்று போல்ஷெவிக் கட்சி நிரூபித்துக்காட்டியது. [i]

இவ்வாறு தொழிலாளி-விவசாயி கூட்டணியின் அவசியத்தையும், உலக ஏகாதிபத்திய அமைப்பின் பின் தங்கிய, பலவீனமான பகுதிகளில் சோசலிச புரட்சி வெடிக்கும் வாய்ப்பு உண்டு என்பதையும் முன்வைத்ததோடு இல்லாமல், இப்புரிதலை விரிவுபடுத்தி, கடும் காலனி ஆதிக்க சுரண்டலுக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளிலும் நாட்டு விடுதலைக்கான எழுச்சிகள் நிகழும் காலமாக ஏகாதிபத்திய காலம் அமையும் என்பதையும் லெனின் தெளிவுபடுத்தினார். வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கமும், ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படும் காலனி நாடுகளின் உழைப்பாளி மக்களும் நேச சக்திகள் என்ற முக்கியமான கருத்தை லெனின் வலுவாக முன்வைத்தார். இவ்விரு சக்திகளும் வலுப்பெற்று அவர்கள் போராட்டங்கள் வெற்றி அடைவது மானுடம் உலகளவில் சோசலிச புரட்சியை நோக்கி பயணிக்க மிக அவசியம் என்ற புரிதலை சர்வதேச பொது உடைமை இயக்கத்தில் லெனின் கொண்டு சென்றார்.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் மாநாடு

19ஆம் நூற்றாண்டின் இறுதி 30 ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவம் வேகமாக வளர்ந்ததுடன் தொழிலாளி வர்க்கமும் அதன் அரசியல் அமைப்புகளும் வலுப்பெற்று வந்தன. இதில் அன்றைய ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சி என்ற பெயரில் இயங்கிய கம்யூனிஸ்டுகள் அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் கணிசமான இடங்களைப் பெறும் அளவிற்கு அக்கட்சி செல்வாக்கு பெற்றிருந்தது. ஆனால் ஒருகாலத்தில் ஐரோப்பாவிற்கே வழிகாட்டியாக இருந்த அக்கட்சியில் திருத்தல்வாதம் தலைதூக்கியது. இதன் விளைவாக, 1914ஆம் ஆண்டு பல நாடுகளின் தொழிலாளி வர்க்கங்களை ஒன்றிணைத்து, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே மூண்ட லாபவெறி காக்கும் போரை எதிர்த்து உழைப்பாளி மக்கள் காவு கொடுக்கப்படுவதை தடுப்பது என்ற தனது சர்வதேசக் கட்மையை நிறைவேற்றுவதற்குப் பதில் இக்கட்சி ஜெர்மானிய பேரரசின் யுத்தத்தை ஆதரிக்கும் நிலை எடுத்தது. இந்த பின்னடைவின் அடிப்படை காரணங்களை லெனின் தனது *ஏகாதிபத்தியம்* நூலிலும் , *‘ஏகாதிபத்தியமும் சோசலிச(இயக்க)த்தின் பிளவும்’* என்ற கட்டுரையிலும் விரிவாக விளக்கியுள்ளார். சோசலிசம் இவ்வாறு எதிர்கொண்ட நெருக்கடியான பன்னாட்டு சூழலில், அக்டோபர் புரட்சிக்கெதிராக ஏகாதிபத்திய வல்லரசுகள் படையெடுத்த பின்னணியில்தான் 1919ஆம் ஆண்டு மார்ச் 2 முதல் 6 வரை ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்முயற்சியில் மாஸ்கோவில் நடந்த சர்வதேச மாநாட்டில் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை நோக்கி உலகம் பயணித்திட உதவும் இலக்குடன் பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் சக்திகளையும் உறுப்பினர்களாக கொண்ட, பரஸ்பர உதவிக்கான அமைப்பாக “கம்யூனிஸ்ட் அகிலம்” என்ற புதிய அமைப்பு பேரியக்கமாக பிறந்தது.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் மாநாடு 1920ஆம் ஆண்டு ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 7 வரை நடைபெற்றது. துவக்க நிகழ்ச்சிகள் மட்டும் பெட்ரோகிராட் நகரில் நடந்தன. பின்னர் மாநாடு மாஸ்கோவில் நடந்தது. இந்த மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட பல காலனி நாடுகளில் விடுதலை போராட்டங்களில் கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றிய வரலாற்று சிறப்பு மிக்க விவாதம் இடம் பெற்றது. இதில் லெனின் அவர்களின் பங்கு மிக முக்கியமானது.

தேச விடுதலை போராட்டங்களும் கம்யூனிஸ்ட் அகிலமும்

இந்த மாநாட்டின் ஒரு முக்கிய விவாதப்பொருள் ‘காலனி நாடுகளின் பிரச்சினை’ என்பதாகும். இப்பிரச்சினை குறித்து, அச்சமயம் நிலவிய உலக சூழலை கணக்கில் கொண்டு, லெனின் சமர்ப்பித்த முன்மொழிவுகள் கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டிருந்தன:

- உலகளவில் ஒடுக்கும் தேசங்கள், ஒடுக்கப்படும் தேசங்கள் என்று நாடுகள் வேறுபடுத்தி பார்க்கப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் அகிலம் ஒடுக்கப்படும் தேசங்களின் மக்கள் பக்கம் நிற்கும்.

- ஏகாதிபத்திய நாடுகள் நடத்திய முதல் உலகப் போருக்குப்பின் உலக அரசியல் அமைப்பிலும் பல்வேறு தேச மக்களுக்கு இடையிலுமான பரஸ்பர உறவுகள், சோவியத் ரஷ்யா, அதன் தலைமையில் உள்ள பல சோவியத் குடியரசுகள் மற்றும் சோவியத் வடிவிலான ஜனநாயக இயக்கங்கள் ஆகியவற்றின் மீது விரல்விட்டு என்ணக்கூடிய ஏகாதிபத்திய நாடுகள் நடத்தி வரும் யுத்தத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது.

- பின்தங்கிய காலனி நாடுகளில் எந்த தேச விடுதலை இயக்கமும் முதலாளித்துவ ஜனநாயக தன்மை கொண்டதாகத்தான் இருக்க முடியும். காரணம், இங்கு மக்களில் பெரும்பகுதியினர் தம்வயம் உற்பத்திக்கருவிகளை வைத்துக்கொண்டு, சிறு/குறு/பெரு சுய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள். இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளே. எனினும், பின்தங்கிய, காலனி நாடுகளில் நடந்துவரும் தேச விடுதலைக்கான போராட்டங்களை “தேசீய-புரட்சிகர” இயக்கங்கள் என்று கம்யூனிஸ்ட் அகிலம் வரையறுக்கிறது. காரணம், இந்த இயக்கங்களின் தலைமையும் தன்மையும் எல்லா இடங்களிலும், எல்லா கட்டங்களிலும் முதலாளித்துவ-ஜனநாயகத்தன்மையுடன் தான் இருக்கவேண்டும் என்பது அவசியம் அல்ல.

- கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் நாம் (அகிலம்) காலனிகளில் முதலாளி வர்க்கத்தினர் தலைமையிலான தேச விடுதலை இயக்கங்களுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் ஆதரவு அளிப்போம்: அவை உண்மையில் புரட்சிகரமாக இருக்கவேண்டும். மேலும் இந்த இயக்கத்தவர், நாம் சுரண்டப்படும் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் புரட்சிகர உணர்வுபெறும் வகையிலும் கல்வியூட்டி, அமைப்புரீதியாக திரட்டுவதற்கு தடையாக இருக்கக்கூடாது.

- வளர்ந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கம் பின் தங்கிய காலனி நாடுகளின் உழைப்பாளி மக்களுக்கு உதவ வேண்டும்.

- சோவியத் குடியரசுகளில் வெற்றி பெற்றுள்ள தொழிலாளி வர்க்கம் பின்தங்கிய நாடுகளுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். இது சாத்தியமாகும் பொழுது, பின்தங்கிய நாடுகள் முன்னேறுவது சாத்தியமாகும்.

அகிலத்தின் லெனினிய நிலைபாடும் இந்தியாவும்

1920இல் நிலவிய இந்திய சூழலுக்கு இவை பொருத்தமாகவே இருந்தன. இந்தியாவில் 1880களிலேயே முதலாளிவர்க்கம் அரசியல் களத்திற்கு வந்துவிட்டது. அதன் அரசியல் கருவியாகத்தான் இந்திய தேசீய காங்கிரஸ் உருவானது. அங்கொன்றும் இங்கொன்றுமாக 1860களிலிருந்தே தொழிலாளிகளின் போராட்டங்கள் நிகழ்ந்திருந்தபோதிலும், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பிரவேசம் 1920களில் தான் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்படத் துவங்கியது. ஆகவே, இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமை முதலாளி வர்க்கத்திடம் தான் இருந்தது. அதேசமயம் காந்தி அவர்கள் விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு ஆற்றத்துவங்கிய பிறகுதான் அது விரிவான மக்கள் இயக்கமாக மாறத்துவங்கியது. இதில் கோடிக்கணக்கான விவசாயிகளின் பங்கேற்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அன்றைய நிலமையில் துவக்க நிலையில் இருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் அடுத்துவந்த பல பத்தாண்டுகளில் தேச விடுதலை போராட்டத்தில் இருந்து தனிமைப்பட்டு விடாமல் இருக்க கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாம் மாநாட்டு வழிகாட்டுதல் பெரிதும் உதவியது. அகிலத்தின் இரண்டாம் மாநாட்டின் காலனி எதிர்ப்பு இயக்கங்கள் தொடர்பான நிலைபாட்டை உருவாக்கியதில், ஆழ்ந்த மார்க்ஸீய தத்துவார்த்த ஞானத்துடன் இப்பிரச்சினையைப்பற்றி லெனின் முன்வைத்த கருத்துக்கள் ஆகப்பெரிய பங்கு வகித்தன.

---

[i] 1916ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் லெனின் எழுதிய ‘*ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்*’ என்ற முக்கியமான கட்டுரை. மேலை நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர வளர்ச்சியை தடுப்பதில் காலனிகளை ஏகாதிபத்திய நாடுகள் சுரண்டி அபரிமிதமான

உபரிகளை பெறமுடிந்த நிலை எத்தகைய பங்கு ஆற்றியது என்று இக்கட்டுரையில் விளக்குகிறார்.
(https://www.marxists.org/archive/lenin/works/1916/oct/x01.htm)

விடுதலைப் போரில் காங்கிரஸின் வர்க்க அணுகுமுறை

இரா. வேல்முருகன்

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதியன்று டெல்லி செங்கோட்டையில் ஏற்றப்பட்டிருந்த யூனியன் ஜாக் கொடி அகற்றப்பட்டு, அந்த இடத்தில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. தங்களின் நீண்டகால சுதந்திர கனவு ஈடேறிவிட்டதாக இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் குதூகலித்து கொண்டாடினார்கள்.

ஆனால் இந்த விடுதலை நாள் கொண்டாட்டத்தில் காந்தி பங்கேற்கவில்லை. மாறாக அப்போது நடைபெற்ற வகுப்பு கலவரங்களில் இருந்து நவகாளியிலும், பீகாரிலும் அமைதியை நிலைநாட்ட அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். அதே நாளில் ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் சிறைச்சாலையில் விடுதலை போராட்ட கைதிகளாக அடைபட்டிருந்தனர். இந்திய மக்களுக்கு விடுதலை நாள் செய்தியை கேட்டு ஒரு பத்திரிக்கையாளர் காந்தியை அணுகிய போது " என் இதயம் வறண்டு போய்விட்டது" என அவர் மிகுந்தவேதனையுடன் பதிலளித்தார்.

காங்கிரஸ் கட்சி

காங்கிரஸ் கட்சி 1885 இல் துவங்கப்பட்டபின் முதல்20 ஆண்டுகள் வரை பிரிட்டிஷ் காலனி அரசிடம் மனு கொடுக்கும் பணியை மட்டுமே செய்து வந்தது என்றால் மிகையாகாது. 1896-97 ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 45 லட்சம் மக்கள் பஞ்சத்தில் மடிந்துபோனார்கள். 1899 - 1900 வரை 12.50 லட்சம் மக்கள் மாண்டுபோனார்கள். 1860 முதல் 1908 வரை 48 ஆண்டுகளில் 20 ஆண்டுகள் இத்தகைய பெரும் பஞ்சம் நீடித்து, ஒரு

கோடிக்கும் அதிகமாக மக்கள் செத்து மடிந்தனர். இதற்கு எதிராக பெரும் போராட்டங்களை காங்கிரஸ் கட்சி நடத்தவில்லை.

ஆனால் இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக இந்திய நாட்டின் இளைஞர்கள் அதிதீவிர குழுக்களாக உருவாகிவந்தனர். மகாராஷ்ட்ராவில் சாபேகர் சகோதரர்கள் போன்ற இளைஞர்கள் மித்ரமேலா, அபிநவ் பாரத் போன்ற அமைப்புகளை உருவாக்கி போராடினார்கள். வங்கத்தில் அனுசீலன் சமிதி, யுகாந்தர் குழு போன்ற அமைப்புகள் நடத்திய போராட்டங்கள் வங்கப் பிரிவினையை பிரிட்டிஷ் அரசு திரும்பப் பெறச் செய்ததில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தன. இதே கால கட்டத்தில் காங்கிரஸ் கட்சியில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தீவிரமாக செயல்படவேண்டும் என லாலா லஜபதி ராய் , பாலகங்காதர திலகர், விபின் சந்திர பால் போன்றோரும், பிரிட்டிஷ் அரசின் கோபத்திற்கு ஆளாகாமால் மிதமாக செயல்பட வேண்டும் என கோபாலகிருஷ்ண கோகலே, அன்னிபெசன்ட் அம்மையார் போன்றோரும் இரண்டு குழுக்களாக செயல்பட்டனர்.

ஜாம்ஷெட்பூரில் டாட்டா - புதிய ஜவுளி ஆலையை (சுதேசி ஆலை) துவக்கினார் அப்போது இந்திய தேசிய முதலாளிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி தீவிரவாத தலைவர்கள் லால்-பால்-பால் அந்நிய பொருட்கள் புறக்கணிப்பு, தேசிய கல்வி கொள்கை, சுதேசி போராட்டம், சுயராஜ்யம் (தன்னாட்சி) போன்ற சீர்திருத்த கொள்கைகளை முன்வைத்தார்களே ஒழிய இந்திய மக்களுக்கான முழு சுதந்திரம் என்ற கோரிக்கை அவர்களிடத்தில் எழவில்லை. 1905ஆம் ஆண்டு நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கோபாலகிருஷ்ண கோகலே தலைமை உரையாற்றிய போது இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் ஆட்சி நடைபெறவேண்டும் என்பதுதான் காங்கிரஸ் குறிக்கோள். காலப்போக்கில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டு காலனி நாடுகள் சுயமாக ஆட்சியை எப்படி நடத்துகிறார்களோ, அதேபோன்று இந்தியர்களும் அரசாட்சி நடத்துவோம் என்றார். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டிஷ் ஆட்சி கொள்கையை மென்மையாக விமர்சிப்பது,அரசியல் சீர்திருத்தங்கள் உருவாக்குவது இதன் மூலம் சில சலுகைகளை பெறுவதுதான் காங்கிரசின் நோக்கமாக இருந்தது.

காந்தியின் தலைமை

"ஊழியர்களும் மக்களுமே இந்த உலகின் ஆகப் பெரிய செல்வம், மிக உயர்ந்த தீர்மானகரமான சக்தி, மிக உயர்ந்த மூலதனம், அவர்கள் இல்லாமல் உலகில் எந்த புரட்சியும் சாத்தியமில்லை" என்பதை உணர்ந்த மகாத்மா காந்தி இதனை சரியாக பயன்படுத்தினார்". காந்தியின் தலைமையின் கீழ் இந்திய முதலாளி வர்க்கம் வெகுமக்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கியது.

"மகாத்மா காந்தியின் தலைமையில் செயல்பட்ட முதலாளித்துவ வர்க்க தலைமையானது பிரிட்டிஷாரை பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்து கொண்டு வருவதற்காகவே வெகு மக்கள் பங்கேற்கும் போராட்டத்தை நடத்துவது என்ற வியூகத்தையும் அதற்கேற்ப உத்திகளையும் மிகவும் விரிவான முறையில் திட்டமிட்டு நடத்தியது." அதனால்தான் காந்தி நடத்திய ஒத்துழையாமை போராட்டமாக இருந்தாலும் சரி, சட்டமறுப்பு இயக்கமாக இருந்தாலும் சரி, வெகுமக்கள் எழுச்சியை உருவாக்கி இந்திய தேசிய முதலாளிகளின் நலனுக்கு ஏற்ப சில உடன்பாடுகளோடு போராட்டத்தை திரும்ப பெற்றார் .

பீஹாரில் சம்பரான் மாவட்டம் விவசாயிகள் போராட்டத்தில் மகாத்மா காந்தி பங்கெடுக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் அழைத்தனர். விவசாயிகளின் அழைப்பின் பேரில் காந்தி அங்கே சென்றதோடு அல்லாமல் அகிம்சா போராட்டத்தை அங்கு நடத்தி வெற்றியும் பெற்றார். இதேபோல் குஜராத் மாநிலத்திலுள்ள கெட்டா விவசாயிகளின் கோரிக்கைக்கான சத்தியாகிரக போராட்டத்திற்கு வழிகாட்டியது மட்டும் இல்லாமல், சத்தியாகிரக போராட்டத்தை நடத்தி வெற்றியும் கண்டார். இதன் காரணமாக காந்தியின் புகழ் இந்தியா முழுவதும் பரவியது.

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ரௌலட் சட்டத்தை எதிர்த்து அகிம்சை வழியில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி முடிவு எடுத்தது. மகாத்மா காந்தி எவ்வித நிபந்தனையும் இன்றி ஒத்துழையாமை இயக்கம் என அறிவித்து திலகர் போன்ற தீவிர தேசிய தலைவர்களை எல்லாம் ஓரங்கட்டியது என்றாலும், ஒத்துழையாமை இயக்கத்தையும், கிலாபத் இயக்கத்தையும் இணைத்து மாபெரும் மக்கள் எழுச்சியை உருவாக்க முடிந்தது.

ஒத்துழையாமை இயக்கம் அறிவித்ததுடன் காந்தி மகாராஷ்டிராவில் இருந்து ரயிலில் புறப்படும்போது கைது செய்யப்பட்டார், பம்பாய், டில்லி போன்ற இடங்களில் நடந்த வன்முறை. இந்த வன்முறைக்கு எதிராக மக்கள் போராடியபோது டாக்டர் சத்பாலும், டாக்டர் சைபுத்தீன் கிச்சிலுவும் நாடு கடத்தப்பட்டனர். இதற்கு எதிராக நடந்த எழுச்சியின் துவக்கம்தான் ஜாலியன் வாலாபாக்கில் ஜெனரல் டயர், மைக்கேல் டயர், லார்டு ஷெட்லாந்து நடத்திய மிருகத்தனமான மனிதத்தன்மையற்ற துப்பாக்கிச்சூடு. இதில் ஏராளமான மக்கள் தங்கள் இன்னுயிரை இழந்தனர், பல நூற்றுக்கணக்கான மக்கள் பலத்த காயம் அடைந்தனர்.
இந்த படுகொலை நாடு முழுவதும் மிகப்பெரிய அளவில் மக்களை கிளர்ந்தெழ செய்தது. இந்த போராட்டத்தின் உச்சமாக உத்திரபிரதேசம்

மாநிலம் கோரக்பூர் மாவட்டம் அருகில் உள்ள ஒரு சிறிய நகரமான சௌரி சவ்ரா காவல் நிலையத்தை கிராம மக்களே ஒருங்கிணைந்து முற்றுகை இட முயற்சி செய்தனர். அப்போது காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் 3 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.இதை தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட மக்கள் காவல் நிலையத்தை சூறையாடினார்கள். இதில் 22 காவலர்கள் மாண்டனர். இதில் 228 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு 172 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. காந்தி இந்த தண்டனையை வரவேற்றார்.
ஆனால் கம்யூனிஸ்ட் தலைவர் நரேன் பட்டாச்சார்யா நாடுமுழுவதும் பெரும் போராட்டங்களை நடத்தினார்.பின்னர் இதன் விளைவாக 110 பேரின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாகவும்,19 பேருக்கு தூக்குதண்டனையாகவும் மாறியது.
இப்போராட்டத்திற்கு பிறகு ஏதோ மக்கள் பெரும் தவறை செய்ததை போல் மக்களை நொந்துக் கொண்டு காந்தி ஒத்துழையாமை போராட்டத்தை திரும்ப பெற்றார்.

பூரண சுயராஜ்யமும் கம்யூனிஸ்டுகளும்

1920 ஆம்ஆண்டு தாஷ்கண்டில் அமைக்கப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் கட்சி கிளைதான் இந்தக் கோரிக்கையை முதலில் முன்வைத்தது. 1921ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிலும், 1922கயா காங்கிரஸ் மாநாட்டிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த அபானி முகர்ஜியும், எம்.என்.ராயும் தயாரித்த பூரண சுயராஜ்யம் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது. காங்கிரஸ் கட்சியில் இந்த தீர்மானம் பெரும் கருத்து மோதலை உருவாக்கியது. இதன் விளைவாக மௌலானா ஹஷ்ரத் மொஹானி முழு விடுதலை தீர்மானத்தை மாநாட்டில் முன்மொழிந்தார். ஆனால் காந்தி இந்த தீர்மானத்தை தோற்கடித்ததோடு நில்லாமல் எம்.என்.ராயின் இந்த முயற்சி அரைவேக்காட்டுத்தனம் என்றும் சாடினார்.
தேசிய முதலாளிகளும், காங்கிரஸ் கட்சியும் பூரண சுயராஜ்யம் என்ற இந்த நிலைபாட்டிற்கு வருவதற்கு சுமார் பத்தாண்டுகள் தேவைப்பட்டது . 1929ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான் பூர்ண சுயராஜ்யம் கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

1928ஆம் ஆண்டு நடைபெற்ற விவசாய தொழிலாளர்களின் போராட்டத்திலும்,பம்பாய், குஜராத், உத்திரபிரதேசம் போன்ற பகுதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தம் மற்றும் குஜராத் விவசாயிகளின் வரிகொடா இயக்கம் ஆகியவற்றில் சுமார் 1.50 லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்றனர். அதேபோன்று தென்னிந்திய இரயில்வே வேலைநிறுத்தம், தொழிற்தகராறு மசோதா போராட்டத்தில் சுமார் 5 லட்சம் மக்கள் பங்கேற்றனர். இந்த

சூழலில்தான் வேறு வழியின்றி காந்தியால் பூரண சுயராஜ்யம் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டு மாநாடும் ஏகமனதாக அங்கீகரித்தது.

காந்தி - இர்வின் உடன்படிக்கை

1930 ஏப்ரல் 6ஆம் தேதி ‘உப்பு சத்தியா கிரகம்’ காந்தி தலைமையில் துவங்கப்பட்டது. இப்போராட்டம் தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளை காந்தி விதித்திருந்தார். நாடு முழுவதும் சத்தியகிரகிகள் கைது செய்யப்பட்டனர். ஆனால் மே 5ஆம் தேதி வரை காந்தி சுதந்திரமாக விடப்பட்டிருந்தார். காந்தியை தவிர, நேரு, வல்லபாய் பட்டேல் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். இப்போராட்டம் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் கைது செய்யப்பட்டால் எனது தோழர்களோ , பொதுமக்களோ பதட்டம் அடைய தேவையில்லை. நமக்கு வழிகாட்டுவது கடவுள்தான் நானில்லை. ஒவ்வொரு கிராமமும் உப்பு உற்பத்தி செய்யட்டும். உத்தரவை மீறி உப்பு கொண்டு வரட்டும். மதுபானக்கடைகள், கஞ்சா மையங்கள், அந்நிய துணிக்கடைகள் முன்னால் பெண்கள் மறியல் நடக்கட்டும். ஒவ்வொரு குடும்பத்தின் இளைஞர்களும் பெரியவர்களும் நூல் நூற்கட்டும்.அந்நிய துணிகள் எரிக்கப்படட்டும். இந்து, இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள் அனைவரின் இதயமும் ஒன்றிணையட்டும். பள்ளி கல்லூரிகளை விட்டு மாணவர்கள் வெளியேறட்டும். அரசு ஊழியர்கள் பணியில் இருந்து விலகட்டும். மக்கள் பணியில் தங்களை ஈடுபடுத்திகொள்ளட்டும். அப்போது முழு சுயராஜ்யம் வந்து நமது கதவுகளைத் தட்டும் என்றார் காந்தி.

அனைத்து மக்களையும் தனது அகிம்சா போராட்டத்தில் கொண்டுவருவதற்கு காந்தி முயன்றார். அவர் தொடங்கிய உப்பு சத்தியாகிரக போராட்டம் மக்கள் போராட்டமாக உருமாறி மாபெரும் எழுச்சியை மக்கள் மத்தியில் உருவாக்கியது. இதுவரை வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்த பெண்கள், குழந்தைகள் என அனைத்து பகுதி மக்களும் இப்போராட்டத்தில் இணைந்தனர். ஆனால் இப்போராட்டம் வெளிப்படையாகவே இந்திய ஜவுளி ஆலை முதலாளிகள் நலன்களை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே அமைந்தது. அந்நிய துணி பகிஷ்கரிப்பும், சுதேசிய ஆதரவு பிரச்சாரமும் இந்திய ஆலை முதலாளிகளின் நலன்களையும் பாதுகாக்க பயன்பட்டதே ஒழிய சுயராஜ்யம் என்பது பின்னுக்குப் போனது.

1931ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள் காந்தி - இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் ஏற்கனவே 1929 ஆம் ஆண்டு லாகூரில்

நடைபெற்ற மாநாட்டில் கொண்டு வந்த பூரண சுயராஜ்யம் என்ற இலக்கை நீர்த்துப் போக செய்து சில நிபந்தனைகளுடன் காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. "சில நிபந்தனைகளுடன் உப்பு தயாரிக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டது, அத்துடன் அந்நிய துணிக்கடைகள் மற்றும் மதுபானக்கடைகள் முன் மறியல் செய்வதற்கான உரிமை,காங்கிரஸ் கட்சி பகிரங்கமாக செயல்பட அனுமதி, இவற்றிற்கெல்லாம் மேலாக அறவழி போராட்டத்தில் ஈடுபட்ட சத்தியாகிரகிகளை விடுதலை செய்வது போன்ற பிரிவுகள் அதில் அடங்கியிருந்தன. ஆனால் காந்தியின் முதலாளி வர்க்க நலனுக்கு சிறிது கூட பங்கம் வந்துவிடக்கூடாது என்ற சிந்தனையில் சுயராஜ்யம் என்ற நிலைபாட்டிலிருந்த கீழிறங்கி வந்தது மட்டும் அல்ல; விடுதலை போராட்டத்தில் தீவிரமாக பங்கெடுத்த பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் உள்ளிட்ட அதிதீவிர இயக்கத் தோழர்களின் தூக்குத்தண்டனை குறித்தோ, தீவிர போராட்ட வீரர்கள் குறித்தோ மவுனம் சாதித்ததோடு அவர்களின் தண்டனையும் நியாயமே என்பதுதான் காந்தியின் நிலைபாடாக இருந்தது.

இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாகவும், எதிராகவும் காங்கிரஸ் கட்சி தலைவர்களிடத்திலும் மக்கள் மத்தியிலும் இரண்டு விதமான உணர்வு உருவாகியது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு ஒரு உண்மை புரிய வைக்கப்பட்டிருந்தது. தாங்கள் கடைப்பிடிக்கும் இந்த மோசமான அடக்குமுறைகளால் மக்களின் எழுச்சியை தடுத்து நிறுத்தமுடியாது என்பதையும் பிரிட்டிஷார் புரிந்துகொண்டனர்.

காங்கிரசின் நெருக்கடியும் மக்கள் எழுச்சியும்

1933ஆம் ஆண்டு சத்தியாகிரகப் போராட்டத்தை காந்தி விலக்கிக் கொண்ட பிறகு காங்கிரஸ் கட்சிக்குள் பெரும் நெருக்கடி நிலவியது. இதன் விளைவாக காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து செயல்பட்ட முற்போக்காளர்கள், சோசலிஸ்டுகள் சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு, வித்தல்பாய் பட்டேல், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்களெல்லாம் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தனி அமைப்பாக செயல்படும் நிலைக்கு வந்துவிட்டனர். இவையனைத்தையும் காந்தி எதிர்க்கவில்லை. காரணம் நேரு காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் வரை எந்த பாதிப்பும் இல்லை என காந்தி புரிந்து வைத்திருந்தார். "நேருவின் கருத்துக்கள் காங்கிரசின் கொள்கையுடன் அடிப்படையில் மாறுபட்டு விலகிச்செல்லும் அளவிற்கு தெளிவானதொரு வடிவத்தை எடுத்துள்ளதாக நான் கருதுவதில்லை. எனவே அவரது கம்யூனிச சிந்தனையை கண்டு யாரும் அச்சமடைய வேண்டாம்" என்றார் காந்தி. இந்த புரிதலில் இருந்துதான் இடதுசாரிகள் பக்கம் மக்கள்

சென்றுவிடாமல் தடுக்க ஜவஹர்லால் நேருவை தொடர்ந்து மூன்று முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராக அனுமதித்தார் காந்தி.

விவசாயிகள் கோரிக்கைகளை காங்கிரஸ் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என கோரிக்கைகளை வைத்தனர். ஆனால் காங்கிரஸ் இக்கோரிக்கையை நீண்ட காலமாக புறக்கணித்து வந்தது. காங்கிரஸ் கட்சியே விவசாயிகளின் கட்சிதான் என வாதிட்டது. ஆனால் 1935ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்டுப்பாட்டிற்குள் இல்லாமல் தனித்து இயங்கும் விவசாய சங்கம் துவக்கப்பட்டது. "உழுபவனுக்கே நிலம் சொந்தம், நிலவுடைமையை ஒழிப்போம்" என்பது போன்ற கோஷங்களுடன் அது உதயமானது.

தொழிலாளர்கள் இதற்கு முன்பு வரை காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து செயல்பட்டனர். ஆனால் தற்போது காங்கிரஸ் கட்டுப்பாட்டில் இருந்து விலகி சுயமாகச் செயல்படும் தொழிற்சங்கமாக உருவெடுத்தது. 1920களில் துவங்கிய ஏஐடியுசி பதினாறு ஆண்டுகளுக்கு பிறகு தொழிலாளர்களின் நலன் காக்க ஏகாதிபத்தியம் மற்றும் தேசிய முதலாளிகளை எதிர்த்தும் இயக்கம் நடத்தும் அளவிற்கு வர்க்க அரசியல் தெளிவடைந்திருந்தனர். இதை பொறுக்க முடியாத முதலாளித்துவத்தின் தேசிய தலைமை தொழிற்சங்கத்தை உடைக்க காங்கிரஸ் கட்டுப்பாட்டில் செயல்படும் தொழிற்சங்கத்தை உருவாக்க முயற்சித்தார்கள். ஆனால் இந்த காலத்தில் பாம்பே, கான்பூர், டில்லி, கல்கத்தா, நாக்பூர் உள்ளிட்ட பகுதிகளில் தொழிற்சங்கம் வேகமாக வளர்ந்தது மட்டுமல்ல; அது வெகுமக்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட்டது.

இதேபோன்று ரவீந்திரநாத் தாகூர், சரோஜினி நாயுடு, முன்ஷி பிரேம்சந்த் போன்ற உயரிய எழுத்தாளர்கள் எல்லாம் இணைந்து இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம், நாடு முழுவதும் செயல்பட்ட இளைஞர், மாணவர் குழுக்களையெல்லாம் ஒருங்கிணைத்து அனைத்திந்திய இளைஞர் மாணவர் அமைப்புகள் துவங்கின. இந்த அமைப்புகளை எல்லாம் ஒருங்கிணைத்து பூரண சுயராஜ்யம் பெறவேண்டும் - அதாவது "இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி அகற்றப்பட்டு அந்த இடத்தில் தொழிலாளி - விவசாயிகள் நலன் காக்கும் ஆட்சி அமைக்க வேண்டும்" என்ற பொருள்பட 1936இல் லக்னோவில் கூடிய கிசான் காங்கிரஸ் முடிவெடுத்தது. இத்தகைய போக்குகளால் காங்கிரஸ் கட்சி கலக்கமடைந்தது. அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு தயாரானது.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7, 8 தேதிகளில் காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்க தீர்மானத்தை ஜவஹர்லால் நேரு முன்மொழிந்தார் என்பதுதான் மிக முக்கியமான செய்தி. அத்தீர்மானத்தில் கம்யூனிஸ்டுகள் கொடுத்த திருத்தத்திற்கும் நேருதான் பதிலளித்தார். காங்கிரஸ் கட்சியின் அனைத்து குழுக்களையும், பிரிவினரையும் இணைத்து தனது பின்னே அணிவகுக்க செய்து, தீர்மானத்தை கிட்டத்தட்ட கம்யூனிஸ்டுகளை தவிர ஒருமனதாக நிறைவேற்றிட காந்தியால் முடிந்தது. ஆகஸ்ட் 8 அன்று வெள்ளையனே வெளியேறு இயக்க தீர்மானத்தை நிறைவேற்றிய உடன் இரவோடு இரவாக பொழுது விடிவதற்குள் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

சரியான திட்டமிடல் இல்லாமல் துவக்கியதன் விளைவாக பிரிட்டிஷ் அரசாங்கம் இப்போராட்டத்தை கடுமையாக ஒடுக்க முடிந்தது. நாடுமுழுவதும் சுமார் 2,000 சத்தியாகிரகிகள் கைது செய்யப்பட்டனர் இருந்தாலும் இப்போராட்டம் குறிப்பிடத்தக்க எந்த விளைவையும் உருவாக்கவில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் போக்குகள் ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய பாசிசஅணிக்கு எதிராக திரும்பியதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போருக்கு பிறகு இந்தியாவை ஆட்சி செய்ய முடியாது. ஆனாலும், உடனடியாக இந்தியாவை ஒப்படைக்கும் மனநிலையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இல்லை. ஆனால், காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் ஏதாவது ஒரு வகையில் நெருக்கடி கொடுத்து பேச்சுவார்த்தை மூலம் இந்திய தேசிய முதலாளிகள் அதிகாரத்தை கைப்பற்றிட முயற்சி செய்தனர்.எனினும் அவர்கள் இதில் வெற்றியடையவில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிறகு வெகுஜன எழுச்சி ஏற்பட்டது. நாடு முழுவதும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், வங்காளத்தில், விளைச்சலில் ஐந்தில் மூன்று பங்குக்கு உரிமை கோரிய குத்தகை விவசாயிகளின் தேபாகா போராட்டம், பம்பாய் ஆர்.ஐ.என் (பிரிட்டிஷ் கப்பற்படை மாலுமிகள்) போராட்டம், அவர்களுக்கு ஆதரவான பம்பாய் தொழிலாளர்களின் போராட்டம், விவசாயிகளின் உரிமைக்காகவும் தொழிலாளர்களின் உரிமைக்காகவும் 400க்கும் மேற்பட்ட தோழர்களை பலிகொடுத்து போராடிய கேரள புன்னப்புரா வயலார் எழுச்சி, வடக்கு மலபார், கையூர், திரிபுரா பழங்குடி இன எழுச்சி என இப்படி ஏராளமான வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டங்கள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இக்காலத்தில் நடந்தன.

கூலி விவசாயிகள், ஏழை விவசாயிகளின் உரிமைக்காக உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கோரிக்கைக்காக முன்வைத்து 4000க்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாய தொழிலாள தோழர்கள் உயிரை ஈந்து நடத்திய தெலுங்கானா ஆயுத எழுச்சி, மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்தில் வோர்லி பழங்குடி மக்களை கந்துவட்டி கும்பலிடமிருந்தும், நிலப்பிரபுக்களிடம் இருந்தும் விடுவிக்க நடந்த வீரம் செறிந்த போராட்டம், கீழைத்தஞ்சையில் விவசாயிகள் போராட்டம் இவை அனைத்தையும் தலைமை தாங்கி நடத்தியது கம்யூனிஸ்டுகள்தான். ஏகாதிபத்திய எதிர்ப்பு போரில் முன்னணி பகுதியாக கம்யூனிஸ்டுகள் மாறினார்கள். சுதந்திரத்திற்காக ஏற்பட்ட வெகுஜன எழுச்சியை இந்திய தேசிய முதலாளி வர்க்கம் தங்களின் சுயநலனுக்காக பயன்படுத்தியது. தேசிய முதலாளித்துவ வர்க்கம் சமரச போக்கில் ஈடுபட்டு பிரிட்டிஷ் அரசிடமிருந்து சமாதான ரீதியில் அதிகாரத்தை மாற்றிக்கொள்ள முயன்றனர்.

1946ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் பிரிட்டிஷ் - இந்திய கப்பற்படை வீரர்கள் நடத்திய எழுச்சி. பிரிட்டிஷார் கடைபிடித்து வந்த இனப் பாகுபாட்டு கொள்கைக்கு எதிராக ஒரு மாதத்திற்கு முன்பாக இந்திய விமானப் படைவீரர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் படையைச் சேர்ந்த அனைத்து பிரிவினர் மத்தியிலும் இனப்பாகுபாட்டிற்கு எதிரான உணர்வு இதேபோன்று இருந்து வந்தது. ஆனால் கடற்படை வீரர்கள் நடத்திய கலகத்திற்கு ஈடான வடிவத்தை வேறு எந்த போராட்டமும் எட்டவில்லை.

கடற்படை வீரர்களின் எழுச்சி உலக யுத்தத்திற்கு பிந்தைய காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு எழுச்சியில் மிகவும் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாக கருதப்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியாவின் தரைப்படை,விமானப்படை மற்றும் கடற்படை வீரர்களோடு இணைந்து மாபெரும் எழுச்சியாக உருவாகிய இப்போராட்டத்திற்கு ஆரம்பத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் மற்றும் முஸ்லிம் லீக் ஆகிய இயக்கங்கள் ஆதரவு அளித்தன. ஆனால் பின்னர் காங்கிரசும், முஸ்லிம் லீக்கும் போராட்டத்திற்கு அளித்த ஆதரவை திரும்ப பெற்றன. ஆனால் கம்யூனிஸ்டுகள் கப்பற்படை எழுச்சிக்கு வழிகாட்டியது மட்டும் அல்லாமல் அவர்களுக்கு ஆதரவாக இந்தியாவின் முக்கிய நகரங்களில் இருந்த அனைத்து தொழிலாளர்களையும் இணைத்து காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது நாடு முழுவதும் மிகப்பெரிய எழுச்சியை உருவாக்கின. இந்த போராட்டங்களுக்கு பிறகே, இனியும் இந்தியாவை ஆட்சிசெய்ய முடியாது என்ற நிலைக்கு பிரிட்டிஷார் வந்தனர்.

இந்திய விடுதலை என்பது நம் பாட புத்தகத்தில் படித்தது போல் கத்தியின்றி, இரத்தமின்றி பெறப்பட்டதல்ல. மகாத்மா காந்தியின் ஆளுமைமையை கண்டு அஞ்சி நடுங்கி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விடுதலையை கொடுத்துவிடவில்லை. காங்கிரஸ் கட்சி நடத்திய ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என அவர்கள் நடத்திய இந்த மூன்று போராட்டத்தினால் மட்டுமே நாடு விடுதலை அடைந்துவிடவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய முஸ்லிம் லீக், கத்தார் கட்சி, மித்ரமேலா, அபிநவ் பாரத், அனுசீலன் சமிதி, யுகாந்தர் குழு, இந்துஸ்தான் குடியரசு ராணுவம், இந்துஸ்தான் குடியரசு சோசலிஸ்ட் ராணுவம், பாரத் மாதா சங்கம், ஏஐடியுசி, கிசான் சபா, அனைத்திந்திய மாணவர், இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் இப்படி நூற்றுக்கணக்கான அமைப்புகள் நடத்திய போராட்டங்களில் லட்சகணக்கான மக்கள் எழுச்சியாக பங்கெடுத்ததும் கூட அதற்குக் காரணம் என்பதையும் வரலாற்றிலிருந்து மூடி மறைத்துவிட முடியாது.

இந்திய விடுதலைப் போரட்டத்தின் வர்க்கத் தன்மை

கி.தீபான்ஜன்

வரலாற்றுத் துறை ஆய்வு மாணவர் (ஜே.என்.யூ)

பிரிட்டிஷ் காலனிய ஆதிக்கமும் அதற்கு எதிராக எழுந்த மிகப்பெரிய மக்கள் எழுச்சியான சுதந்திரப் போராட்டமும் இந்திய வரலாற்றில் மிக முக்கியமான காலமாகும். தற்கால இந்திய சமுதாயத்தில் நிலுவையிலுள்ள பல சிந்தனை ஓட்டங்கள் மேற்கண்ட காலத்தில் உருவானதுதான். இந்திய தேசிய போராட்டத்தின் துவக்கமும் 1885இல் அமைக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் உருவாக்கம் மற்றும் அதன் வளர்ச்சியோடு பொதுவாக இணைத்து பார்க்கப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தேசிய அளவிலான ஒரு இயக்கம் உருவானதற்கு பல அரசியல் சமுதாய கலாச்சார மற்றும் பொருளாதார காரணங்கள் உள்ளன. பற்பல காரணங்கள்

இருப்பினும் இந்த கட்டுரையின் நோக்கம் இந்திய சுதந்திர போராட்டத்தின் வர்க்கத் தன்மையை ஆராய்வதாகும்.

சுதேசி முழக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பொதுக்கல்வி முறை துவங்கப்பட்டது. இதனால் ஆங்கிலக் கல்வி பெற்ற உயரடுக்கு இந்தியர்கள் உருவானார்கள். இவர்கள் பெரும்பாலும் மத்தியதர வர்க்கத்தை சார்ந்தவர்களாகவும், உயர் சாதியை சார்ந்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் ஆங்கில கல்வி அறிவை பெற்று இருந்தாலும் அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருந்தது. பெரும்பாலான அரசாங்க வேலைகள் முதல் பெருவியாபாரம் வரை ஆங்கிலேயர்களின் ஆதிக்கம்தான் நீடித்தது. இந்த நடுத்தர வர்க்க நுண்ணறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பல மடங்காக உயர்ந்தது. அவர்கள் பெரும்பாலும் இந்தியா முழுவதிலும் இருந்த ராஜதானி தலைநகரங்களில் காணப்பட்டனர். இந்த நடுத்தர வர்க்க நுண்ணறிவு உள்ளவர்களின் அபிலாசைகள்தான் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானதற்கான பிரதான காரணம்.

அக்காலம் இந்திய முதலாளித்துவம் வலுபெறாத காலம். இந்திய முதலாளிகள் தன்னைத்தானே ஒரு வர்க்கமாக திரள வேண்டும் என்ற ஒரு யோசனை உருவான காலம். வரலாற்று அறிஞர் சுமித் சர்க்கார் கூறுகையில் ''1860களில் பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்ட பிறகு ஆங்கிலேய முதலாளிகளுக்கு தங்கள் வியாபாரத்தை நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் பணியாளர்கள் தேவைப்பட்டனர். இந்தத் தேவையை பூர்த்தி செய்தவர்கள்தான் அப்போது இருந்த இந்திய முதலாளிகள். 1920கள் வரை இந்திய முதலாளி வர்க்கம் பெரும்பாலும் தரகு முதலாளிகளாகதான் இருந்தார்கள். 1905ல்தான் முதன்முதலாக சுதேசி இயக்கம் வங்காளத்தில் நடைபெற்றபோது வெள்ளையர் பொருட்கள் புறக்கணிப்பு, இந்தியப் பொருட்கள், இந்திய கல்வி, இந்திய வியாபாரம் போன்ற முழக்கங்கள் ஒலித்தன. அப்போதுதான் இந்திய முதலாளிகள் முதல்முறையாக சுய உற்பத்தியினால் லாபம் கண்டனர்'' என்கிறார்.

போராட்டமும் சமரசமும்

''1914-1947 வரையிலான காலகட்டத்தில் இந்திய முதலாளித்துவம் ஆங்கிலேய வியாபாரத்தோடு போட்டி போட்டு வளர்ந்த காலம்'' என்கிறார் பிபின்சந்திரா. "இந்தியா சுதந்திரம் அடையும் தருணத்தில் இந்திய

நிறுவனங்கள் 72-73% உள்நாட்டு சந்தையை பிடித்ததாகவும், ஒழுங்கமைக்கப்பட்ட வங்கித்துறையில் 80% மேலான வைப்பு வைத்திருந்தார்கள்" என்றும் அவர் கூறுகிறார். "1920களின் நடுப்பகுதியில் முதலாளிகள் தங்களுடைய நீண்டகால வர்க்க நலனை சரியாக யூகித்து, தைரியமாகவும் வெளிப்படையாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தார்கள்" என்றும் கூறுகிறார்.

இப்படியொரு நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், எந்த ஒரு போராட்டமாக இருந்தாலும், தங்களின் வர்க்க நலனை பாதிக்காத அளவில் இருக்க வேண்டும் என்பதில் மிக கவனமாக இருந்தார்கள். அவர்கள் முடிந்த அளவிற்கு அரசியலமைப்புக்கு உட்பட்ட முறையில்தான் போராட்டம் நடத்த விரும்பினார்கள். சட்ட ஒத்துழையாமை இயக்கம் வெகுநாட்களுக்கு மேல் நீடித்தால், புரட்சிகர சக்திகள் இயக்கத்தை திசை திருப்பி விடுவார்கள் என்ற அச்சமும், நீண்டநாள் இயக்கம் தொடர்ந்தால் அவர்களுடைய தினசரி வியாபாரம் பாதிக்கப்படும் என்பதும் அதற்கான காரணமாகும். இவை அவர்களின் வர்க்க நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று எண்ணினர். ஒரு பக்கம் இத்தகைய தயக்கங்கள் இருந்தாலும், பெருந்திரள் சட்ட ஒத்துழையாமை இயக்கம் நடக்கும் பொழுது அவர்கள் தங்களுடைய வர்க்க பலன்களை அடைவதில் குறியாக இருந்தார்கள். சட்ட ஒத்துழையாமை இயக்கம் வெகுநாட்கள் நீடிக்கும் சூழல் வரும்போதெல்லாம் பெரும்பாலான நேரங்களில் அரசாங்கத்திற்கும் காங்கிரசுக்கும் இடையிலான மத்தியஸ்தர்களாக செயல்பட்டனர். அவர்கள் வர்க்கம் சார்ந்த ஸ்தூலமான சலுகைகளை பேச்சுவார்த்தையின்போது பெற முயன்றனர். அவர்களின் கோரிக்கை நிறைவேறினால் போராட்டத்தில் சமரசம் ஏற்படும். கோரிக்கை நிறைவேறாவிட்டால் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்று மிரட்டலும் விடுத்தனர். இத்தகைய நிலையில் இவர்களுக்கு பக்கபலமாக நின்றது காங்கிரசும் காந்தியும்தான்.

1931இல் சட்ட ஒத்துழையாமை இயக்கம் நாடெங்கும் பரவி போராட்டம் உச்சத்தில் இருந்தபோது, இந்திய முதலாளிகளின் பிரதிநிதியான ஜி.டி. பிர்லா, இன்னொரு முதலாளிகளின் பிரதிநிதியான புருஷோத்தம் தாஸ்க்கு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் "எள்ளளவும் சந்தேகமில்லை நமக்கு இப்பொழுது தரப்படும் சலுகைகள் அனைத்தும் முழுக்க முழுக்க காந்திஜியால்தான்.... நாம் விரும்புவதை அடைய வேண்டுமென்றால், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயக்கம் சோர்வடைய விடக்கூடாது". என்று குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ்டுகளின் போராட்ட யுக்தி

உலகமெங்கும் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நாடுகளிலெல்லாம், 1917இல் தோழர் லெனின் தலைமையில் நடந்த ரஷ்ய புரட்சி உத்வேகத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. இந்தியாவிலும் ரஷ்ய புரட்சியின் கருத்தோட்டங்களின் தாக்கம் மிகப்பெரிய அளவில் இருந்தது. இந்தியாவில் பெரும்பான்மையாக இருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் நகர்ப்புற தொழிலாளர்களுக்கும், தங்களின் கோரிக்கைகளுக்காக போராடுவதற்கு ரஷ்யப் புரட்சி உத்வேகம் அளித்தது. தொழிற்சங்கங்கள் பிறந்தன. தொழிலாளர்களின் போராட்டங்கள் வளர்ந்தன. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியும் உருவாயிற்று. நாடெங்கும் கட்சி கிளைகள் உருவாயின. கம்யூனிஸ்ட் தோழர்களின் செயல்பாடு வெகுஜனங்கள் மத்தியில் பெருமளவு வரவேற்பு கண்டது. தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இணைந்து செயல்பட்டனர். கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் தாக்கம் பொதுவெளியில் மட்டும் அல்லாமல், காங்கிரஸ் இயக்கத்திற்குள்ளேயும் வலுவடைந்தது. இளம் காங்கிரஸ்காரர்கள் மார்க்சிய சித்தாந்தத்தினால் ஈர்க்கப்பட்டனர். முதல்முறையாக அகில இந்திய அளவில் மாணவர் அமைப்பும், தொழிற்சங்கங்களும் உருவாகின. கம்யூனிஸ்ட் அகிலத்தின் வழிகாட்டுதல்படி, கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் இயக்கத்திற்கு உள்ளேயே இருந்து செயல்பட்டனர். இப்படியான ஒரு அரசியல் சூழல் குறித்து இந்திய முதலாளி வர்க்கம் அச்சம் கொண்டது.

புதிதாக உருவாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில், காலனிய நாடுகள் குறித்த ஆரம்ப ஆய்வு அறிக்கையில் (Preliminary theses on the national colonial question) கீழ்காணும் அம்சங்களை தோழர் லெனின் சுட்டிக்காட்டினார்.

காலனிய நாடுகளில் நடைபெறும் தேசிய போராட்டம் ஒரு முதலாளித்துவ ஜனநாயக இயக்கமாக மட்டும்தான் இருக்க முடியும். ஏனெனில், பின்தங்கிய நாடுகளில் பெரும்பகுதி மக்கள் பூர்ஷ்வா முதலாளித்துவ உறவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயிகளே. மேலும், பெரும்பாலான நேரங்களில் ஒடுக்கப்பட்ட நாடுகளின் முதலாளி வர்க்கம், தேசியப் போராட்டத்தை ஆதரிக்கிறார்கள். அதேசமயம், அந்த வர்க்கம் அந்நிய முதலாளிகளுடனும் நல்லிணக்கத்தோடு செயல்படுகின்றன. அதாவது புரட்சிகர இயக்கங்களும், புரட்சிகர வர்க்கங்களும் வலுவடையும்போது உள்நாட்டு முதலாளிகளும் ஏகாதிபத்தியமும் ஒன்றிணைந்து எதிர்க்கும் என்றும் லெனின் எச்சரித்தார்.

ஆகவே, முதலாளித்துவ ஜனநாயக இயக்கத்திற்கு உள்ளே புரட்சிகர சக்திகளையும் சீர்திருத்தவாதிகளையும் வேறுபடுத்தி காட்ட வேண்டிய அவசியம் உள்ளது. தேசிய முதலாளிகளுக்கு அவர்களின் நாட்டு விடுதலைக்கான போராட்டத்தில் ஒரு முக்கிய பங்கு உள்ளது என்கிற வகையில், காலனிய நாடுகளின் முதலாளித்துவ விடுதலைப் போராட்டங்களை புரட்சிகரமானதாக உள்ளவரை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்க வேண்டும் என்றார் லெனின். விவசாயிகளையும் பெரும்பாலான உழைப்பாளி மக்களையும் முதலாளிகள் தலைமையிலான விடுதலை போராட்டங்களில் திரட்டும்போது முட்டுக்கட்டைகள் உருவாக்கக்கூடாது. கம்யூனிஸ்டுகள் இந்த முதலாளித்துவ ஜனநாயக இயக்கத்திற்கு உள்ளேயிருந்து கட்சி ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும், கட்சி உறுப்பினர்களை சேர்க்க வேண்டும், தொழிலாளர்கள் விவசாயிகளை திரட்டி போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும் இரண்டாவது அகிலம் வழிகாட்டியது. இதனடிப்படையில்தான் இந்தியாவிலும் கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் இயக்கத்துக்குள்ளே இருந்து செயல்பட்டனர்.

முதலாளிகளுக்கு சாதகமான செயல்திட்டம்

''1920களின் கடைசியில் காங்கிரஸ் கட்சிக்குள் கம்யூனிஸ்ட்களின் செயல்பாடு, கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் ஈர்க்கப்படும் காங்கிரசின் இளம் ஊழியர்கள், இவைகளை கண்டு முதலாளிகள் கவலை அடைந்தனர். எனவே, காங்கிரஸ் இயக்கத்திற்குள் தங்களையும் பெருமளவில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்வதென அவர்கள் முடிவு செய்தனர். அதனடிப்படையில் பல முதலாளிகள் காங்கிரசில் தங்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டனர்'' என்கிறார் பிபன் சந்திரா.

''காந்தி எந்த ஒரு போராட்டம் அறிவித்தாலும், இயக்கத்தின் தலைமை மற்றும் போக்கு குறித்து மிக கவனமாக இருப்பார். 1920இல் ஒத்துழையாமை இயக்கம் அறிவித்தார். தொழிலாளர்களும் பெருமளவில் பங்கெடுத்தார்கள். தொழிலாளர்களின் போராட்டம் ஆங்கிலேய தொழிற்சாலைகளுக்கும் முதலாளிகளுக்கும் எதிராக இருக்கும் வரை கவலை கொள்ளமாட்டார். ஆனால் தொழிலாளர்களின் போராட்டம் இந்திய முதலாளிகளுக்கு எதிராக நடக்கும்போது, உடனடியாக ஏதாவது காரணத்தை காட்டி போராட்டத்தை வாபஸ் பெற்று விடுவார். இதுதான் 1921இல் பம்பாய் நகரில் நடைபெற்ற தொழிலாளர்கள் போராட்டத்தின்போதும் நடந்தது. எனவே, காந்தியினுடைய போராட்ட வடிவமும், நிலைபாடும் இந்திய முதலாளிகளுக்கு மிகவும் சாதகமான ஒன்றாக இருந்தது. அதனால்தான் தேசிய நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் காங்கிரஸ் இயக்கத்தோடு

காந்தியோடு எந்தவிதமான தத்துவார்த்த ரீதியான, செயல்பாட்டு ரீதியான பிரச்சினையையும் இருந்ததில்லை. அப்படியே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் காங்கிரஸ் கமிட்டிக்கு உள்ளேயே விவாதித்து தனக்கு சாதகமான முடிவை எடுக்கும் அளவிற்கு முதலாளிகள் வலுவாக இருந்தனர். காந்தியின் வருகைக்குப் பிறகு தேசியப் போராட்டம் வெகுஜனப் போராட்டமாக உருவானது. ஆனால், அந்தப் போராட்டத்தின் உள்ளடக்கம், அதை வழிநடத்திய நுண்ணறிவு உள்ளவர்களின் சிந்தனையோட்டமும் குணாம்சமும் முதலாளித்துவத்திற்கு சாதகமாகவே இருந்தது" என்கிறார் பேராசிரியர் இர்பான் அபிப்.

முற்போக்கு பாதையை தடுத்த சமரசம்

தோழர் இ.எம்.எஸ். குறிப்பிடுவதுபோல, இந்திய விடுதலை என்பது ஆங்கில ஏகபோக முதலாளித்து வர்க்கத்திற்கும், இந்திய நிலப் பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நடந்த ஒரு சமரசம் ஆகும். இந்திய முதலாளிகள் சுதந்திரத்திற்குப் பிறகும் நாட்டின் பொருளாதார, அரசியல், சமுதாய, கலாச்சார வளர்ச்சியை முதலாளித்துவப் பாதையிலேயே உருவாக்க விரும்பினர். அதற்காக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பாதையிலேயே நிலப்பிரபுத்துவத்தையும் முதலாளித்துவத்திற்கு முந்தைய நிறுவனங்களையும் அடிப்படையாகக் கொண்டு, அப்பொழுது மேலோங்கியிருந்த பிற்போக்கான ஆதிக்க வர்க்கங்களின் ஆட்சி அமைக்கப்பட்டது. இந்த நிலைமை உருவானதற்கான காரணத்தை அறிய சுதந்திர போராட்டத்தின் துவக்க காலங்களுக்கு செல்ல வேண்டும். இ.எம்.எஸ். கூறுகிறார், "இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமை பூர்சுவா தேசியவாதிகளாக இருந்தமையால் அவர்களால் அவர்களின் வர்க்க நலனை மீறி பார்க்க இயலவில்லை. இத்தகைய நிலைப்பாடு அவர்களின் சமுதாய பொருளாதார தத்துவங்களை வழி நடத்தியது. சமுதாயத்தில் நிலவிய பல்வேறு பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு காணுவதில் திறன் அற்றவர்களாக இருந்ததுதான் இந்தியாவின் தேசிய பிரச்சினைகளுக்கு காரணம்."

இ.எம்.எஸ். சுதந்திரப் போராட்டத்தின் தலைவர்களின் சமுதாய சிந்தனையை மேலும் விளக்குகிறார். "சுதந்திர போராட்டத்தின் ஆரம்பகட்டத்தில் (துவக்ககால மதப்பழமைவாத) தீவிரவாத தேசியவாதம் என்பது, உண்மையில் ஒரு பழமைவாத சக்தி. அவர்கள் நாட்டினுடைய காலாவதியான அனைத்து சமுதாய கலாச்சார விஷயங்களையும் பாதுகாக்க முற்பட்டனர்.

நவீனத்துவத்தின் உந்து சக்தியாக இருக்க வேண்டியே முதலாளித்துவ வளர்ச்சி அன்றைய ஆட்சியாளர்களுடன் சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டது" என்கிறார் இ.எம்.எஸ்.

மேலும் மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிரவாத தேசியவாதிகளுக்குமான வேறுபாட்டையும் சமூக கலாச்சார சிந்தனைப் போக்கையும் அவர் விளக்குகிறார். மிதவாதிகளை நவீனத்துவவாதிகள் என்றும், அவர்கள் இந்தியாவையும் பிரிட்டன் நாட்டைப்போல ஒரு முதலாளித்துவ நவீனத்துவப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று எண்ணினர். ஆங்கிலேயர்கள் அதை செய்ய தவறுவதன் மீதே அவர்களது கோபமிருந்தது. தீவிரவாத தேசியவாதிகளுடன் ஒப்பிடுகையில் மிதவாதிகள் சமுதாய கலாச்சார அம்சத்தில் முற்போக்கானவர்களே. தீவிரவாத தேசியவாதிகள் நாட்டில் காலாவதியான அரசியல் மற்றும் சமூக கலாச்சார நிறுவனங்களை அன்னிய முதலாளித்துவத்திற்கு எதிராக பாதுகாத்தனர். தேசியப் போராட்டம் இந்த தீவிரவாத தேசியவாதிகளால் தலைமை தாங்கப்பட்டதால், பிற்போக்கான சமூக அம்சங்கள் மறையாமல் பாதுகாக்கப்பட்டன. இதுவே ஆங்கிலேயே ஏகபோக முதலாளித்துவத்திற்கு, இந்திய நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே சுதந்திர இந்தியாவில் உருவான சமரசத்திற்கான அடிப்படை என்கிறார் இ.எம்.எஸ்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது திட்டத்தில் " தங்களது காலனி ஆட்சியின் போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களோ அல்லது சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இந்திய முதலாளிகளோ முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூகத்தை உடைத்தெறிய முன்வரவில்லை. முதலாளித்துவம் வளர்ச்சி அடைய அதற்கு முந்தைய சமூகம் நொறுக்கப்பட வேண்டுமென்பது மிக முக்கிய முன் நிபந்தனையாகும். இன்றைய இந்திய சமூகமானது, ஏகபோக முதலாளிகளால் ஆதிக்கம் செய்யப்படுகிற சாதிய, மத மற்றும் ஆதிவாசி அமைப்புகளைக் கொண்ட ஒரு வினோதமான கலவையாக உள்ளது. முதலாளித்துவதிற்கு முந்தைய சமூக அமைப்பை அழிப்பதில் விருப்பு கொண்ட அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றுபடுத்தி, அந்த சமூக அமைப்பிற்குள் இருக்கக் கூடிய அனைத்து புரட்சிகர சக்திகளையும் ஒன்றிணைத்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதன் மூலம் சோசலிசத்தை நோக்கிய மாற்றத்திற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள வேண்டிய கடமை உழைப்பாளி வர்க்கத்திற்கும் அதன் கட்சிக்கும் இருக்கிறது." என்கிறது.

பெண்ணியமும் வர்க்க உணர்வும்

- அர்ச்சனா பிரசாத்

வர்க்க ஒடுக்குமுறையிலிருந்தும், ஆணாதிக்க ஒருக்குமுறையிலிருந்தும் விடுதலைக்கான போராட்டங்களில் பங்கேற்றபடியே, சொந்த விடுதலைக்காகவும் போராடிய பெண்களுடன், கம்யூனிச இயக்கம் அடைந்த வளர்ச்சிக்கு இருந்த இணைப்பினைக் குறித்து இக்கட்டுரை விவாதிக்கிறது.

வர்க்கப் போராட்டத்தின் ஆணாதிக்க எதிர்ப்பு குணம் என்பது தானாகவே உருவாகிடும் ஒன்றல்ல. வர்க்க உருவாக்க நிகழ்வின் மீது ஒருங்கிணைந்த முன்னெடுப்புகளின் மூலம் செய்கிற தலையீட்டின் வழியாகத்தான் அந்த குணம் வளர்த்தெடுக்கப்படுகிறது. இதனை பெரும்பாலான ஆய்வாளர்களும் முன்னணி களப்பணியாளர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த விதத்திலேயே, பெண் உரிமைக்கான அனைத்து இயக்கங்களும் முதலாளித்துவ எதிர்ப்புத் தன்மையோடு இருக்க வேண்டும் என்கிற அவசியமும் இல்லை என்பதைப் பார்க்கலாம். அவைகளுக்கு முதலாளித்துவ அமைப்பிற்குள்ளாகவே பெண்களின் சமூக மற்றும் அரசியல் உரிமைகளை அடைவதற்கான குறுகலான லட்சியங்கள் மட்டுமே இருக்கலாம். அவ்வகையில் பார்க்கும்போது, வர்க்கப் போராட்டங்களும், பெண் விடுதலை இயக்கங்களும் தங்களிடையே தத்துவ அடிப்படையில் கொண்டுள்ள பிணைப்பையும், அவை முதலாளித்துவத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் உள்ள உறவை எவ்வாறு புரிந்துகொண்டுள்ளன என்பதையும் பொருத்துத்தான் இந்த இயக்கங்களால் மாற்றங்களை வென்றெடுக்கும் தன்மை அமைகிறது.

இந்தக் கட்டுரையில், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உருவாக்கமானது, பெண்கள் விடுதலைக்கான போராட்ட வளர்ச்சியில் எவ்வளவு முக்கியமான தருணமாக அமைந்தது என்பதை விவரித்துள்ளேன். கம்யூனிஸ்டுகள் தலைமையிலான இயக்கங்களில் பங்கேற்ற பெண்கள், பாலின அடிப்படையிலான பாரம்பறிய உழைப்புப் பிரிவினை ஏற்பாட்டிலிருந்து வெளியேற ஊக்கம் பெற்றார்கள். இயக்கத்தின் செயல்பாட்டு முறையில் அவர்கள் ஏற்படுத்திய தாக்கமானது, முதலாளித்துவ எதிர்ப்பிற்கும் ஆணாதிக்க எதிர்ப்பிற்கும் இடையிலான நுணுக்கமான தொடர்புகளைப் புரிந்துகொள்ள வழி ஏற்படுத்தியது.

இந்தியாவின் பெண்ணுரிமைப் போராட்டங்களுக்கு, கம்யூனிச இயக்கத்தின் நீண்ட நெடும் வரலாறு ஆற்றியுள்ள பங்களிப்பு என்ன? ஆணாதிக்க எதிர்ப்பு முன்னெடுப்பானது, முதலாளித்துவ எதிர்ப்பாகவும் இருக்க வேண்டியது அவசியமா? ஆம் என்றால் இந்திய கம்யூனிசத்தின் விடுதலைக் கண்ணோட்டத்தில் பெண்களுடைய பங்கு என்ன? என்ற கேள்விகள் நடப்புச் சூழலில் முக்கியமாகின்றன. இந்த கேள்விகளுக்கு விடைகளைக் கண்டறிவது, மார்க்சிய பெண்ணியவாதிகளுக்கும், 'தனித்து இயங்கும்' பெண்கள் இயக்கங்களுக்கும் இடையிலான கோட்பாடு சார்ந்த மற்றும் தத்துவ நோக்கு அடிப்படையிலான குழப்பங்களைத் தீர்க்கவும் அவசியமாகும். இக்கட்டுரையின் முதல் பகுதி இந்த விவாதங்கள் சிலவற்றை விவரிப்பதுடன், முதலாளித்துவக் குவிப்பின் போக்கில் உற்பத்திக்கும், சமூக மறு உற்பத்திக்கும் இடையிலான உறவின் அடிப்படையில் இவற்றை மதிப்பீடு செய்கிறது. இரண்டாம் பகுதி, கம்யூனிச இயக்கத்தின் தொடக்க காலங்களில் பெண்கள் வகித்த பங்கினை சுருக்கமாக விளக்குகின்றது. மூன்றாம் பகுதி, வர்க்க அடிப்படையிலான இயக்கங்களுக்கும், ஆணாதிக்க எதிர்ப்புணர்வை வளர்ப்பதற்கும் இடையிலான உறவு குறித்த கண்ணோட்டங்களை ஆய்வு செய்கின்றது.

பெண் விடுதலையும் கம்யூனிஸ்ட் இயக்கமும்

முதலாளித்துவ அமைப்பில், அதன் (மூலதன) குவிப்பு வீதத்தை தக்க வைத்திடவும், அதிகரிக்கவும் ஆணாதிக்க நிறுவனங்களும் அதிகாரமும் அவசியம் என்பது நாம் அறிந்ததுதான். ஆணாதிக்கம் என்பது பாரம்பரியமான பாலின உழைப்புப் பிரிவினை அடிப்படையில் சமூக உறவுகளை வடிவமைக்கிறது. அந்த உழைப்புப் பிரிவினையானது உற்பத்திச் சுழற்சியில், பெண்களுடைய கணக்கில் வராத, கணக்கில் கொள்ளப்படாத உழைப்பைச் செலுத்துவதன் மூலம் உபரி மதிப்பினை உறிஞ்சும் நடவடிக்கையின் பகுதியாக ஆகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, உபரிமதிப்பை உருவாக்கும் கட்டமைப்பிற்குள் உழைப்பாளர்களின் மீதான ஒடுக்குமுறைக்கும், ஆணாதிக்கத்திற்குமான தொடர்பு தெளிவாகிறது. மூலதனத்திற்கும் உழைப்பிற்குமான உறவில், பெண்களின் கணக்கில் காட்டப்படாத ஊதியமற்ற உழைப்பு முக்கிய பங்காற்றுகிறது. இதற்கு அடித்தளமாக அமைந்தது சமூக மறு உற்பத்தியாகும். எனவே வர்க்கங்கள் உருவாகும் விதமே பாலின பாகுபாடு நிரம்பியதுதான் என்று கூற முடியும்.

முதலாளித்துவம் ஊடுருவி வளரும் ஒரு சமூகத்தில், ஊதியம் கிடைக்கக் கூடிய உழைப்பில் பெண்களின் பங்கேற்பும் அதிகம் இல்லாத நிலைமை,

குடும்ப அமைப்பின் தாக்கம் காரணமாகத்தான் ஏற்படுகிறது என்பதையும் பார்க்கலாம். வீட்டுவேலைகளுக்குத்தான் மனைவி என்ற நிலை உருவானது பற்றிய விவாதம், தனிச் சொத்துடைமை எவ்வாறு பெண்களை வீட்டுக்குள்ளேயே வாழும் வகையில் கட்டுப்படுத்துவதில் பங்கு வகிக்கிறது என்பதை தெளிவாக்கியது (மியஸ் 1986, ஃப்ரெட்ரிகி 2004). இவ்வாறு, சமூக மறு உற்பத்திக்கு அவசியமான ஊதியமற்ற உழைப்பின் மூலமும், பாரபட்சமான வகையில் கூலி குறைக்கப்பட்ட உழைப்பின் மூலமும் பெண்கள் மீதான பளு அதிகரிக்கப்படுவது, உபரி மதிப்பை உருவாக்கும் இந்தச் சுரண்டல் அமைப்பின் ஒரு பாகமேயாகும். ஆக, சமூக மறு உற்பத்தி முறையில் முக்கிய பங்கு வகிக்கும் ஆணாதிக்க முறையை தவிர்த்து விட்டு, இந்த பொருளாதார சுரண்டல் முறையை தக்கவைத்துக்கொள்ளவோ, தீவிரப்படுத்தவோ இயலாது. எனவே, அடிப்படையில் மூலதனத்திற்கும் கூலியுழைப்பிற்கும் உள்ள முரண்பாடுகளும், சமூக அமைப்புகளில் அந்த முரண்பாடுகளின் வெளிப்பாடுமே பெண்களின் ஊதியமற்ற மற்றும் ஊதியமுள்ள உழைப்பிற்கு இடையேயான பாகுபாடுகளுக்கு காரணம். இந்த கண்ணோட்டத்தின் வழியாக, பெண்கள் உழைக்கும் வர்க்கத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலைமையிலேயே குவிந்துள்ளது எதனால் என்பதை விளக்குவதோடு, மூலதனக் குவியலின் பாதையில் அவர்கள் சந்திக்கும் அமைப்புசார் ஒடுக்குதலே இதற்கு காரணம் என்றும் விளக்குவது சாத்தியம்.

பரவலாக அறியப்பட்ட பெண்ணிய ஆய்வாளர்கள் முன்வைக்கும் வாதங்களிடமிருந்து இந்த புரிதல் பெரிதும் வேறுபட்டதாகும். இவ்விசயத்தில் பரவலான அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு புத்தகம் இவ்வாறு கூறுகிறது: “உலகத்தை, பாலினத்தை சுற்றி அமைந்த படிநிலையாக பார்ப்பது, சமூக ஒழுங்கை பராமரிப்பதற்கு தேவை என்று பெண்ணிய பார்வை ஏற்கிறது; ‘ஆண்’ மற்றும் ‘பெண்’ என வெவ்வேறு குறியீடுகள் கொண்ட இனங்களாக வாழ்வது முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை யதார்த்தங்கள் ஆகும். அதே நேரத்தில், பெண்ணியவாதியாக இருப்பதென்பது, மையத்தை ஆக்கிரமித்துள்ள ஒவ்வொரு ஆதிக்கக் கட்டமைப்பையும் விட அதிகாரம் குறைவான நிலைகளையும், ஒதுக்கப்பட்ட இடங்களையும் கைப்பற்றிட கனவுகாண்பதுவே ஆகும் (மேனன் 2012, பக்.viii). இவ்வாறான ஆய்வுகளில், பாலினம் என்பது (ஆண்பால் என்பதை ஆண் என்றும், பெண்பால் என்பதை பெண் என்றும் சமூக மறு உற்பத்திக் கண்ணோட்டத்தில் காண்பது) ஏற்றத்தாழ்வான கட்டமைப்பில் பெண்களை ஒடுக்கப்பட்ட உறவு நிலையில் நிறுத்துவதாக பார்க்கப்படுகிறது. இருப்பினும் பாலினங்களுக்கிடையிலான உறவுகள் முதலாளித்துவ ஒடுக்குமுறை மற்றும் சமூக உற்பத்தி உறவுகள் என்ற வரம்புகளுக்கு வெளியே பார்க்கப்படுகிறது.

அனைத்து வித ஒடுக்குமுறைகளுக்கும் காரணம் பரந்துபட்ட அரசியல் பொருளாதார முறையில் "பெண்களின்" இடம் சார்ந்தது என்று கருதாமல், பாலின நிலைகளோடு மட்டுமே அவற்றை அடையாளப்படுத்தப் படுகின்றது. பாலின நிலை என்பதில் 'வர்க்கமும் முதலாளித்துவமும்' இரண்டாம் நிலையிலேயே வைக்கப்படுகின்றது: 'அதிகாரப் படுத்துதல்' முழக்கங்களைக் கொண்டு ஏற்கனவே ஒருங்கிணைய தயாராக உள்ள ஒரு 'இனம்' போல பெண்கள் அனுமானிக்கப்படுகின்றனர் (தேவிகா 2016). அதே சமயம் அதிகாரத்திற்கான இயக்கங்கள் மீதான அவ்வகைப் பெண்ணியத்தின் விமர்சனம், அந்த இயக்கங்களை 'ஆண்பால் பெண்ணியம்' மற்றும் 'பெண்பால் பெண்ணியம்' என இரண்டாக எதிர் எதிரே நிறுத்தி, ஆணாதிக்கத்திற்கு எதிரான இயக்கங்களில் ஆண்களின் தலைமை பெண்களின் குரலெழுப்பும் "முகைமைகளை" ஒடுக்குவதாக கருத்தை முன்வைக்கிறது. இப்படிப்பட்ட கண்ணோட்டம், பரந்துபட்ட ஜனநாயக இயக்கங்கள் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதற்கான பெண்களின் திறனை வளர்ப்பதில் ஆற்றும் பங்குகளை கருத்தில் கொள்ள மறுக்கின்றன.

உழைப்பின் மதிப்பு குறித்த கோட்பாட்டிற்கு எதிராக ‘சிறுமைக்' கோட்பாட்டினை முன்வைக்கும் பார்வை, பெண்ணிய நிலையிலிருந்து எழும் மற்றொரு கோட்பாட்டு விமர்சனமாகும். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், பாலின அடிப்படையிலான உழைப்புப் பிரிவினைக்குக் காரணம் பெண்கள் மேற்கொள்ளும் பணிகளைக் குறித்த ‘சிறுமைப்படுத்தும்’ பார்வைதான். ஆக, இதற்கான மூலம் எது என்று தேடி உபரி மதிப்பை சுரண்டும் முறையில் கண்டறியாமல், சமூக ஒடுக்குமுறை அமைப்பிலேயே கண்டறிய வேண்டும் என்கிறது. குடும்ப சூழலைக் கணக்கில் கொள்ளும்போது இத்தகைய பெண்ணிய பார்வையை பயன்படுத்த வேண்டும், மேலும் சாதியின் பன்முகங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு தீண்டாமை மற்றும் தீண்டப்படா உழைப்பு ஆகியவைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற வாதங்களும் எழுகின்றன. சாதிக் கட்டமைப்பு கொண்ட சமூகத்திற்கு உழைப்பின் மதிப்புக் கோட்பாடு முரண்பட்டது என்ற வாதமும் கூட வைக்கப்படுகிறது (ஜான் 2017). சிறுமைப்படுத்தப்பட்டிருக்கும் பெண்களின் உழைப்புக்கு ‘மதிப்பு’ உள்ளதாக பெருமை கற்பிக்கக் கூடாது என்பது ஆய்வாளர் ஜான் வைக்கும் வாதம். இதனை பின்மார்க்சிய கோட்பாடான ‘குறுக்குவெட்டுத்தன்மை’ (**‘intersectionality’**) கொண்டுதான் புரிந்துகொள்ள முடியும் என்று வாதிடுகிறார். அந்தப் பார்வையின்படி, அடிபணிதல் முறைமை பல மட்டங்களில் பின்னிப் பிணைந்தபடியே பெண்களை குறிப்பிட்ட உழைப்புகளுக்குள் அடக்குவதாக வாதம் வைக்கிறார் (ஜான் 2013; 2017). ஆய்வாளர் ஜான் மற்றும் இதர

பெண்ணிய ஆய்வாளர்களால் பயன்படுத்தும் "மதிப்பு" என்பது போதாமையால் தவிக்கின்றது. ஏனென்றால் அவர்களின் கோட்பாடுகளில் சமூக உற்பத்தி/மறு உற்பத்தியும், உபரி மதிப்பை சுரண்டும் முறையும் தொடர்பற்ற தனித்தனி கூறுகளாக கருதப்படுகின்ற. அது பெண்களின் உழைப்பு சிறுமைப் படுத்தப்படுவதை முதலாளித்துவ (மூலதனக்) குவிப்பு நடைமுறையின் ஒரு பகுதியாகக் கருதுவதில்லை. ஊதியமற்ற உழைப்பிற்கு கற்பிக்கப்படும் "சிறுமை"யை முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்கினால் வீட்டு மற்றும் சமூக வாழ்வில் விளையும் அமைப்புசார் ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகக் கருதுவதில்லை. இந்த உண்மையை மறுத்து, வீடு மற்றும் வீடு சாராத உழைப்புகளுக்கு இடையே தவறான பாகுபாட்டை உருவாக்குவதனால், இந்த பெண்ணிய ஆய்வாளர்களின் வாதம், வழக்கமாக தாராளவாதம் சிக்கிக்கொள்ளும் "பொது/தனி" என்ற குழப்ப வலைக்குள் சிக்கிக் கொள்கிறது. இதனால், சமூக-அமைப்புசார் ஒடுக்குமுறையை தீவிரப்படுத்துவதில் ஆணாதிக்கத்தை பயன்படுத்தும் முதலாளித்துவத்திற்கே உரித்தான பங்கை அவர்கள் கவனிக்க மறுக்கின்றனர்.

இத்தகைய பற்றாக்குறையான தத்துவப் பார்வையை பார்க்கும்போது, வர்க்க உருவாக்கத்திற்கும், சமூக ஒடுக்குமுறைகளுக்கும் இடையிலான சிக்கலான உறவுகளைக் குறித்தான சமகால மார்க்சிய பெண்ணிய விவரிப்புகளை நாடுவது தேவைப்படுகிறது. சமூக மறு உற்பத்தி நடவடிக்கையை அதன் பரந்த சாத்தியமான வழிகளில் ஆய்வு செய்வதுதான், மேற்சொன்ன சிக்கலான உறவுகளை அறிந்துகொள்வதற்கு உள்ள பொதுவான வழிமுறையாகும் (வோகல் 2013, பட்டாச்சார்யா 2017). இவ்வகையில், சமூக மறு உற்பத்தி என்பது ஊதியமற்ற குடும்ப உழைப்பை மட்டும் சார்ந்து இல்லை. (சாதியம் உள்ளிட்ட) அதிகாரப் படிநிலையான சமூக கட்டமைப்பையும் சார்ந்துள்ளது. இதர சமூக அமைப்புகளான பண்பாடு, தர்மங்கள் ஆகியவற்றையும் சார்ந்து உள்ளது. இவைகளை சமூக வர்க்கங்கள் என்பதற்கு சமப்படுத்துவதோ, பதிலீடாக பார்ப்பதோ சாத்தியமானதல்ல. சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் ஆதிக்கத்தை மறு உறுதி செய்யும் விதத்தில் வர்க்கங்களை உருவாக்குவதை, சிறப்பாக உறுதிப்படுத்துவதாக ஆணாதிக்க, சாதி மற்றும் சமூக அதிகாரப் படிநிலைகள் அமைகின்றன. வேறு சொற்களில் குறிப்பிட்டால், முதலாளித்துவ அமைப்பினை தக்க வைப்பதற்கு சமூக அதிகாரப் படிநிலைகள் அவசியத்தேவையாகும்; முதலாளித்துவ அமைப்பில் (மூலதனக்) குவிப்பின் பல்வேறு நிலைகளில் அதற்கேற்ற வகையில் இந்த அதிகாரப் படிநிலைகள் மறுவடிவமைக்கப்படுகின்றன. வேறுபட்ட சமூக அமைப்புகளில்

ஆணாதிக்கம் பலதரமாக நிலவுவதை இதற்கு உதாரணமாக பார்க்கலாம் (பிரசாத் 2016). குடும்ப அமைப்பில் நிலவி வந்த சமூக கலாச்சார வழக்கங்களே பெண்களுக்கு ஊதியமுள்ள பணி கிடைப்பதை நிர்ணயிப்பதாக சில பெண்ணியக் குழுக்கள் வைக்கும் வாதத்தை எடுத்துக்காட்டாக பார்ப்போம். வரலாற்றுத் தரவுகளைக் கொண்டு பார்த்தால் தலித் மற்றும் பழங்குடியின பெண்கள் அதுபோன்று வெளியே சென்று பணி புரிய எந்த தடைகளையும் சந்திக்கவில்லை; அவர்களின் பணியில் பங்கெடுக்கும் வீதம் அதிகமாகவே இருந்துவருகிறது என்று தெரிகிறது. ஆனால் இந்த நிலைமை ஆணாதிக்கத்தின் முதுகெலும்பினை முறிக்கவில்லை. மாறாக ஊதியமில்லாத உழைப்பினாலும், பாலியல் சுரண்டல் வழியாகவும் ஆண் ஆதிக்கத்தின் அதிகாரம் வெளிப்பட்டது. உற்பத்தி சக்திகளை கைவசம் வைத்துள்ள வர்க்க, சமூக குழுக்களின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார்கள். இதற்காக சமூக அதிகாரப் படிநிலைகளில் தனிமனித ஒழுக்க விதிகள் மீறப்பட்டன. இந்த சூழலை மனதில் கொண்டு ஆராய்ந்தோமென்றால், சில சாதிய, சமூக குழுக்கள் முதலாளித்துவ குவியலின் உச்சாணியில் இருப்பதற்கு காரணம் பொருளியல், சித்தாந்த மற்றும் சமூக ஆதிக்கமே ஆகும். இது இனவரைவியலை (ethenological) பற்றிய மார்க்சின் எழுத்துக்களில் விவரிக்கப்பட்டுள்ளது (க்ரேடர் 1974, பக்.54), அந்த விவரிப்பில் அவர் ‘பண்டைய நிறுவனங்களின் கூறுகள் பொருளியல் தன்மையில் மின்னுகின்றன, மேலும் அவை தற்காலத்தில் மறுவடிவம் பெற்று, கச்சிதமாக பொருத்தப்பட்டுள்ளன’ என்கிறார். மார்கன் மீதான விமர்சனத்தில் அவர் பின்வருமாறு வாதிடுகிறார்: 'பண்டைய குடும்ப அமைப்பானது, அன்றைய சமுதாயத்தின் சுறுக்க வடிவமாகும் (miniature), அது ஒருவனுக்கு ஒருத்தி என்ற வடிவத்தில் நிலைகொண்டாலும், இந்த உறவுக்குழுக்களுக்கு புறத்தே அமைந்த சமூக நிறுவனங்களின் மேல் நிற்கிறது .... எனவே ‘குடும்பத்திற்குள்ளேயே எழும் முரண்பாடுகள்' குடும்பத்திற்கு வெளியே உள்ள அமைப்புகள் மூலமாக உருவாக்கப்படுகின்றன, அல்லது சமூகத்திற்குள் இருக்கும் சக்திகளால் விளைவிக்கப்படுகின்றன (க்ரேடர் 1974, பக்.18).

வரலாற்றில் வர்க்க முரண்பாட்டின் வளர்ச்சியோடு இணைத்து எழுந்து வளரும் ஒரு முரண்பாடாகத்தான் ஆணாதிக்கத்தையும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் (ஃப்ரெட்ரிகி 2004). இந்த கருத்தினை மார்க்ஸ் தானே விவரிக்கிறார். தனிச்சொத்து குடும்பத்தில் "மறைமுக அடிமைத்தனம்" வளர வழிவகை செய்வதை அவர் கண்டறிந்து சொல்கிறார் (மார்க்ஸ் 1845). இவ்விதத்தில் சோசலிஸ்டுகளுக்கும் மார்க்சிய பெண்ணியவாதிகளுக்கும் (சொத்துடைமையோடு பிணைக்கப்பட்ட) வர்க்கம் குறித்தான கேள்வி,

ஆணாதிக்கத்தை வரலாற்று ரீதியாக புரிந்து கொண்டு விளக்குவதில் முக்கியமான பங்காற்றுகிறது. இதுதான் பெண் விடுதலைக்கான கம்யூனிச சித்தாந்தவாதிகளுக்கும் இதர 'பெண்ணிய'வாதிகளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

கம்யூனிச இயக்கத்தில் பெண்கள் வகித்த பங்கு

(இந்தியாவில்) கம்யூனிச இயக்கத்தின் துவக்க கால வரலாற்றை பார்த்தோமென்றால், ஆணாதிக்க எதிர்ப்பு போராட்டங்களுக்கும் அடித்தளம் ஏற்படுத்துவதில் ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கட்சி பெரும் பங்காற்றியிருப்பது தெரிகிறது.சர்வதேச சோசலிச மகளிர் மாநாடு ஒரு புறமும் , சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் முக்கிய பெண் தலைவர்களின் குரல்கள் இன்னொரு புறமும் ஏற்படுத்திய தாக்கம் ஒருங்கிணைந்து இவ்வாறான பணிகளை மேற்கொள்ள உந்துதலாக அமைந்தன. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே கம்யூனிச இயக்கத்தின் பெண் தோழர்களும் தலைவர்களும், பெண் ஊழியர்கள் மீதான முதலாளித்துவத்தின் தாக்கத்தை ஆய்வு செய்கையில் வர்க்க உணர்வின் வளர்ச்சியை கணக்கில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தனர். முதலாம் சர்வதேச சோசலிச மகளிர் மாநாட்டில் அலெக்ஸாந்த்ரா கொலந்தாய் (1907) கூறியது:

“மொத்த முதலாளித்துவ உலகமும் கேட்டுக் கொண்டிருந்தது ... அதன் பெரும்பகுதி பெண் தொழிலாளர்களின் துணிவான குரல்களைக் கேட்டு ஆத்திரமடைந்தது. ஆண்களின் பேச்சுக்கள் எத்தனை புரட்சிகரமாக இருந்தாலும், எத்தனை ‘முட்டாள்தனமான' தீர்மானங்களை அவர்கள் நிறைவேற்றினாலும், முதலாளித்துவ உலகம் தங்கள் கையிலிருக்கும் நிரூபிக்கப்பட்ட ஒரு வழிமுறையை எண்ணி அமைதிகாத்தார்கள்; கீழ்ப்படிந்த பெண் உழைப்பாளர்களை மாற்றீடு செய்து உழைக்க வைப்பதன் மூலம் ‘ஆத்திரக்காரர்களின்' எதிர்ப்புணர்வை உடைத்து நொறுக்குவது தான் அந்த வழிமுறை. ஆனால் இப்போது அவர்கள் புதிய அதிர்ச்சிகொண்டுள்ளனர்: உலகெங்கிலும் இருந்து உழைக்கும் வர்க்கத்தின் பெண் பிரதிநிதிகள் திரண்டுள்ளார்கள், தம்முடைய கூட்டு முயற்சியால் , உழைக்கும் வர்க்கத்திற்கு விரோதமான உலகத்திற்கு எதிராக போராட ஒரு புதியதோர் ஆயுதத்தை உருவாக்க துணிந்துவிட்டனர் . பெண்களின் துணிவு அனைத்து கற்பனைகளையும் விஞ்சிவிட்டது ; நேற்று வாழாவிருந்த அடிமைகள் இன்று உழைக்கும் வர்க்க விடுதலைக்கான போர்க்குணமிக்க போராளிகளாகியுள்ளனர். (கொலந்தாய் 1907)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மேற்கோள், உழைக்கும் வர்க்கத்தின் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையேயான ஒற்றுமை உழைக்கும் வர்க்க இயக்கங்களை வளர்த்தெடுக்க அவசியமென்று கருதப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது. மேலும், குடும்பத்தில் பெண்களுக்கு நிலவும் அடிமைநிலைக்கு எதிரான தத்துவ நிலைப்பாட்டை கம்யூனிஸ்ட் கட்சியே கடைபிடித்தால் மட்டுமே இந்த ஒற்றுமை சாத்தியமாகும் என்றும் உணரப்பட்டது. பெண்களின் அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளுக்காக மட்டும் போராடும் பெண்ணியக் குழுக்களிடமிருந்து "கம்யூனிச பெண்கள்" தங்களை தனித்து நிறுத்திக்கொண்டனர். 1922ல் கிளாரா ஜெட்கின் எழுதினார், "கம்யூனிஸ்ட்கள் பெண்கள் மத்தியில் இரட்டை இலக்கிற்காக பணியாற்ற வேண்டும்: முதலில் 'சித்தாந்த மற்றும் அமைப்பு ரீதியாக' கம்யூனிச சர்வதேசத்தில் பெண்களை இணைக்க வேண்டும், இரண்டாவது, உழைக்கும் வர்க்கத்திற்கான அனைத்து போராட்டங்களிலும் சாமானிய பெண்களை ஈர்க்க வேண்டும்."

அவர் மேலும் எழுதினார்,

> பெண்கள் மத்தியிலான கம்யூனிஸ்டுகளின் பணி, கட்சியின் தத்துவ மற்றும் உயிரோட்டமான பணிகளோடு எத்தனை இணைக்கப்பட்டிருந்தாலும், இந்தப் பணிகளை மேற்கொள்ள சிறப்பான அமைப்புகளும் தேவை என்பதும் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பெண்கள் மத்தியிலான கம்யூனிஸ்டுகளின் பணிகள் பெண்களுடைய பொறுப்பாக மட்டும் இல்லாமல் , ஒவ்வொரு நாட்டின் ஒட்டுமொத்த கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பாகவும் , கம்யூனிச சர்வதேசத்தின் பொறுப்பாகவும் இருக்க வேண்டும் என்பது சரிதான் . ஆனாலும் நாம் அந்த இலக்கை அடைய வேண்டுமானால், இந்த இலக்கை நோக்கி திட்டமிட்ட வகையில் செயல்பட்டு கம்யூனிச பணிகளை பெண்கள் மத்தியில் முன்னெடுக்கும் கட்சியின் குழுக்கள் அனைத்து இடங்களிலும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் *(* ஜெட்கின் *1922).*

ஆக, இதர பெண்ணியவாதிகளுக்கு மாறாக, முதலாளித்துவத்தை அகற்றிய சமத்துவ சமூகத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவர்களாகவும், போராளிகளாகவும் கம்யூனிச பெண்கள் தங்களை பாவித்துக்கொள்ள வேண்டும் என்கிறார் கிளாரா ஜெட்கின். அதே சமயம்

அனைத்து மட்டங்களிலும் உள்ள கம்யூனிஸ்ட் தோழர்களும் தலைவர்களும் ஆணாதிக்கத்திற்கு எதிரான சித்தாந்தத்தை இறுக்கமாக பிடித்துக்கொண்டு, இதன் மூலம் உழைக்கும் வர்க்கத்தின் மத்தியிலான பரந்துபட்ட ஒற்றுமையை பிணைக்க முயற்சிக்க வேண்டும். எனவே, அனைத்து பிரிவு பெண்களிடமும் சென்றடைந்து, அனைத்து தடைகளையும் உடைத்தெறிய வேண்டும்.

மேற்கூறிய கண்ணோட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டதால், இந்த கோட்பாடுகள் அதிகாரப்பூர்வ ஆவணங்களில் எழுதப்படாதபோதும், இவையே ஆரம்ப கால கம்யூனிஸ்டுகளின் அரசியல் பணிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதில் ஆச்சரியம் இல்லை. தேசிய விடுதலை என்கிற பரந்துபட்ட போராட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் பணி புரிகையில், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளை முன்வைத்து, அவர்களை ஒன்றிணைக்க பாடுபட்டனர். ஊரக மற்றும் நகர்ப்புற இந்தியாவின் துவக்க கால வேலைநிறுத்தப் போராட்டங்களில் பெண்களின் பங்கேற்பு பெருமளவு இருந்தன. பெரும்பாலான வர்க்க-வெகுஜன அமைப்புகளில் தனியே மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டதனால், 1940களின் துவக்கத்திற்குள் அதிக அளவிலான சாமானிய உழைக்கும் வர்க்க குடும்பங்களிடம் கம்யூனிஸ்டுகளால் சென்றடைய முடிந்தது. மஹிலா ஆதம்ரக்ஷ சமிதி (வங்கம்), தற்காப்பு கூட்டமைப்பு (பஞ்சாப்), மஹிலா சங்கம் (ஆந்திரா & மகாராஷ்ட்ரா), அகில கேரள மகளிர் சங்கம், மேலும் பெண் குழந்தைகள் மத்தியில் மணியாற்றிய அநேக சிறு அமைப்புகள் அவைகளில் சிலவாகும். பழமை தேசியவாதத்தின் தாக்கம் பெண்கள் மத்தியில் தீவிரமாக உள்ள பகுதிகள் உட்பட, இந்தியாவின் தொலைதூர ஊரக பகுதிகளில் அமைந்த வீடுகளிலும் கூட கம்யூனிஸ்ட்களின் தாக்கம் விரிவடைவதற்கான அடித்தளத்தையும் ஆதரவினையும் இந்த அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தன. கம்யூனிச பெண்கள் தங்களின் சகோதரிகளிடையே பணி புரிவது போல் உழைக்கும் வர்க்கத்தினர் மத்தியில் பணி புரிந்தனர். வங்கத்தின் மஹிலா ஆதம்ரக்ஷ சமிதியைச் சேர்ந்த பாணி தாஸ்குப்தா ஒரு நேர்காணலில் இவ்வாறு கூறினார்:

> அந்த நாட்களில் எங்களை வீட்டிலிருந்து வெளியே அழைக்கும் தைரியம் கொண்டதாக கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது . வீட்டிலிருந்து பணி புரிய இயலாத, வீட்டில் வாழ இயலாத பெண்களை வெளியே வருமாறு அழைத்து . வெளியே வந்த பெண்களுக்கு நம்பிக்கையான இடம் கிடைக்க கமிட்டிக்களின்

> உறுப்பினர் எண்ணிக்கை ஏழு மடங்கு விரிவாக்கப்பட்டது *[* மஹிலா ஆதம்ரக்ஷ சமிதியைப் பற்றி கூறுகிறார் *].* ஆனால் கூட்டு வாழ்விடங்களான கம்யூன்கள் எங்களை காப்பாற்றியது . நான் நிமிர்ந்து நிற்க கம்யூனிஸ்ட் கட்சியே காரணமாக இருந்தது என்பதை நான் எந்நாளும் மறக்க மாட்டேன் *(* மரிக் *, 2013,* பக் *.111).*

கட்சியில் தொடங்கப்பட்ட இந்த கம்யூன்கள் பெண் போராளிகளுக்கு கண்ணியமான வாழ்வையும் அவர்கள் விடுதலையை பயன்படுத்துவதற்கான சுதந்திர சூழலையும் அளிக்கும் ஒரு புதியதோர் குடும்பத்தை அமைத்துத் தர முனைந்தது. பொதுவான அரசியல் பார்வையைக் கற்பிப்பதன் மூலம் போராளிகளுக்கு இடையேயான நல்லுறவு பேணப்பட்டது. கம்யூன்களுக்கு உள்ளேயே சில சமயங்களில் கம்யூனிச பெண் போராளிகள் பாலினம் சார்ந்த உழைப்புப் பிரிவினைக்கு எதிராகப் பாடுபட வேண்டியிருந்தது என்றாலும், அவர்களை சுற்றியுள்ள பரந்துபட்ட இயக்கமும் அதன் சித்தாந்தமும் அவர்களின் சுய ஆளுமையை வளர்த்துக்கொள்வதற்கான தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தது (லூம்பா 2009). இதனுடன் சேர்ந்து முதலாளித்துவ ஒழுங்கிற்கு எதிராக ஒரு 'புதிய ஒழுங்கை' முன்நிறுத்தும் அதன் அடிப்படை கோட்பாடும் அவர்களுக்கு துணையாக நின்றது. தோழர் சுந்தரய்யா விவரிப்பது போல், 'கட்சி குழுக்கள் ஆண்-பெண் இடையேயான சமத்துவம், அவர்கள் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, விவகரத்துக்கான உரிமை, மருமணத்திற்கான உரிமை ஆகியவைகளைக் கொண்டு வழிநடத்தப்பட்டன.. இது மக்கள் இயக்கத்தையும், சமூக உறவுகளையும் சிறந்த முறையில் வளர்க்க உதவியது' (சுந்தரைய்யா 1972, பக். 263). இந்த புதிய ஒழுங்கு பற்றிய தத்துவத்தின்படி கம்யூன்களில் தனிச்சொத்து என்ற கருத்தே கிடையாது; பெற்றோர் பொறுப்பு என்பது கம்யூன் முழுமையிலும் பகிர்ந்திருக்க வேண்டும். ஆக, குழந்தைகள் மீதான கூட்டு பொறுப்புணர்வின் காரணமாக "தாய்மை" என்கிற எண்ணமே முக்கிய மாற்றங்களை கண்டது. ரஷ்ய சூழலை விவரிக்கையில் இந்த கருத்தைப் பற்றி அலெக்ஸாந்த்ரா கொலந்தாய் விவரிக்கிறார்:

> உழைக்கும் வர்க்கத்தின் விடுதலைக்கான போராட்டத்தை கையிலெடுக்கும் பெண்கள் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டியது , பண்டைய கண்ணோட்டமான "இவர்கள் என் பிள்ளைகள் . இவர்களுக்கே என் அனைத்து பொருளியல் அக்கறையும் பாசமும் உரிமை *;* அவர்கள் உன் பிள்ளைகள் , எனது

> அல்ல . அவர்கள் குளிரில் நடுங்கி பசியால் வாடினாலும் எனக்கு கவலை இல்ல - மற்றவர் பிள்ளைகளுக்கு எனக்கு நேரம் இல்லை " என்கிற தனிச்சொத்து சார்ந்த பார்வைக்கு எந்த இடமும் கிடையாது . உனது - எனது என்கிற பிரிவினையை தவிர்க்க உழைப்பாளர்கள் பழக வேண்டும் . "நம் பிள்ளைகள் . ரஷ்ய கம்யூனிச உழைப்பாளர்களின் பிள்ளைகள் " மட்டுமே உள்ளனர் என்பதை அவள் நினைவில் கொள்ள வேண்டும் *(* கொலோன்டாய் *1977).*

இந்த புரிதல் கம்யூன்களில் வெளிப்பட்டன என்றும், அது கம்யூனிஸ்ட் பெண்களை வர்க்கப் போராட்டங்களில் ஈடுபட தூண்டியது என்றும் பல ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தோழர் உஷாதாய் டாங்கே (ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பிரபல தொழிற்சங்கவாதி). அவர் மே மாதம் 1929ல் தன்னுடைய மகள் ரோசா-வை பெற்றெடுத்த பின்னர், பம்பாய் ஆலை வேலைநிறுத்தத்தினால் (1929) தனது மகப்பேறு கால விடுப்பை துறந்து உடனடியாக வர வேண்டி இருந்ததை நினைவு கூர்ந்தார். அவரின் மகளை மற்ற அனைத்து வேலை நிறுத்தம் செய்யும் தாய்களும் பார்த்துக்கொண்டனர் என்றும், அதனால் அந்த மகள் பல தாய்களும் பெரும் குடும்பமும் பெற்றார் என்றும் நினைவு கூர்ந்தார் (லூம்பா 2019, பக்.166). மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் பாரம்பரிய குடும்ப விலங்குகளை உடைத்தெறிவது கம்யூனிச வழக்கத்தின் விரும்பத்தக்க விளைவாக இருந்தது என்பதையும், இதை அடையாமல் கம்யூனிச இயக்கத்தின் அடித்தளத்தை கட்டியிருக்க முடியாது என்பதையும் காட்டுகின்றன. இந்த உத்தியின் பகுதியளவு வெற்றிக்கு ஆதாரம் பாரம்பரிய குடும்ப அமைப்புகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதே பெரும்பாலான கம்யூனிச பெண்களுக்கு போர்க்குணத்தின் அடிப்படையாக மாறியிருப்பது தான்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகளில், வர்க்கப் போராட்ட இயக்கங்களுக்குள் பெண்களின் தலைமை வளர்ந்துவந்ததைக் கண்ணுற்றோம். அவ்வாறே, அந்தப் பெண்கள் தம் சொந்த வாழ்வில் சந்தித்த இன்னல்களால் எழுந்த தடைகளை எதிர்த்த போராட்டங்கள் வர்க்க அமைப்புகளுக்கு ஏற்றம் கொடுத்தன. உதாரணமாக, பம்பாய் ஆலை வேலை நிறுத்தத்தையும் (1929), சி.ஒ.பொன்னம்மா தலைமையிலான திருவாங்கூர் உழைப்பாளர் சங்க பொது வேலை நிறுத்தத்தையும் வழிநடத்திய உஷாதாய் டாங்கே, அப்போராட்டத்தில் ஈர்க்கப்பட்ட பெண்களின் பெரும் பங்கெடுப்பின் காரணமாக, மகப்பேறு கால உதவிகளை போராட்டத்தின் முக்கிய

கோரிக்கையாக முன் வைத்தார். மும்பையின் மஹிலா ஷர்மிக் சங்கம் என்ற அமைப்பின் பிரதான ஒருங்கிணைப்பாளராக இருந்த தலைசிறந்த தலைவர் அகில்யா ரங்நேக்கர் போல, பெண்களின் தலைமைத் திறனுக்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. 1940களில் வார்லி பழங்குடியினரின் எழுச்சிமிகு போராட்டத்தை வழிநடத்தி, பின்னாளில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவராகிய கோதாவரி பாருலேகர், சிட்டகாங்கில் ஆயுதக் கிடங்கு தாக்குதலை நிகழ்த்திய போர்க்குணமிக்க பெண்களை வழிநடத்திய கல்பனா மற்றும் ப்ரிதிலதா, தெபாகா போராட்டத்தின் பொழுது நாச்சோலேவில் (கிழக்கு வங்கம்) சந்தால் எழுச்சியை வழிநடத்திய இலா மித்ரா (பஞ்சாபி 2017) போன்ற பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. மேலும், விவசாயி-தொழிலாளி வர்க்கங்களில் இருந்து வந்த பெண்கள் உழைக்கும் வர்க்க இயக்கத்தின் திசைவழியில் தாக்கத்தை ஏற்படுத்திய பலநூறு உதாரணங்களும் உள்ளன.

இங்கே முக்கியமாக கவனிக்க வேண்டியது, ஆணாதிக்கத்திற்கு எதிரான சமூக சீர்திருத்தம் கைவிடப்படவில்லை என்பதைத்தான். உதாரணமாக, ஆந்திர மகாசபையின் (தெலுங்கானா எழுச்சிக்கு வித்திட்ட அமைப்பு) இளம் பெண்கள், பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கவும் குழந்தைத் திருமணங்களை தடை செய்யவும் பெரும் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர் (சுந்தரைய்யா 1972). இதே போன்ற பண்பு ஆலப்புழாவில் இளம் ஆண்களும் பெண்களும் சாதிய ஒடுக்குமுறைகளை ஒழித்து ஆணாதிக்கத்திற்கு எதிரான மாண்புகளை வளர்ப்பதில் எடுத்த முயற்சிகளிலும் வெளிப்படுகின்றன (வேலாயுதன் 1983). ஆணாதிக்கத்துக்கு எதிரான சமூக சீர்திருத்தத்திற்கும் மேலாக, பண்ணையார்களின் 'வைப்பாட்டிகளை' விடுதலை செய்து வன்புணர்வு, கடத்தல் போன்ற பாலியல் கொடுமைகளுக்கு எதிராக போராடவும் பெண்கள் ஒருங்கிணைந்தனர். தோழர்களையும் மகளிரையும் பாதுகாக்க பெண்கள் ஒருங்கிணைந்த இது போன்ற தருணங்கள் ஒவ்வொரு போர்குணமிக்க போராட்டங்களிலும் காணப்பட்டன. சில நேரங்களில், வார்லி எழுச்சியைப் போல், பண்ணையார்களின் நிலங்களையும் காட்டு மனைகளையும் ஆக்கிரமிக்கும் போராட்டங்களை பெண்கள் முன் நின்று வழிநடத்தினார்கள். இதுபோன்ற பல முக்கிய பணிகளை சாதித்த பெண் தோழர்கள், கம்யூனிச இயக்கத்தின் ஆணாதிக்க எதிர்ப்பு மாண்புகளை மேம்படுத்துவதில் தங்களின் தாக்கத்தை அதிகரித்தனர்.

வர்க்க கண்ணோட்டம்

மேற்கூறிய விவாதங்களிலிருந்து முக்கிய கேள்வி எழுகிறது: சமூக மாற்றத்தையும், வளங்கள் மறுவிநியோகிப்படுவதையும் இலக்காக கொண்ட கம்யூனிச இயக்கங்கள் இயற்கையாகவே ஆணாதிக்க எதிர்ப்பு பண்புகள் கொண்டவையா? இதற்கு விடையளிக்க முயற்சித்தவர்களின் ஒருவர் மரியா மியஸ்:

> பாலின அடிப்படையிலான உழைப்புப் பிரிவினையை நாம் குடும்ப அமைப்பின் பிரச்சனையாக மட்டும் பார்க்காமல் , மொத்த சமூக அமைப்பின் பிரச்சனையாக அணுக வேண்டும் . ஒவ்வொரு காலத்திலும் , சமூகத்திலும் நிலவும் வர்க்க உறவுகளை உள்ளடக்கிய ஆதிக்க உற்பத்தி உறவுகளிலும் , பரந்துபட்ட தேசிய , சர்வதேச உழைப்புப் பிரிவினையிலும் , ஆண் -பெண் இடையேயான படிநிலையான உழைப்புப் பிரிவினை ஒரு பிரிக்கமுடியாத முடியாத அங்கமாக உள்ளது *(* மியஸ் *1986,* பக் *. 49)* என்கிறார்.

இந்த ஆய்வின் அடிப்படையில், ஆணாதிக்கம் என்பது வர்க்க ஒடுக்குமுறை அடிப்படையிலான உறவுகளில் இயற்கையாகவே பதிந்திருக்கும் சமூக வடிவம் ஆகும். இதை மார்க்சும் ஏங்கல்சும் கூட அவர்களின் எழுத்துக்களில் விளக்கியுள்ளார்கள். எங்கெல்ஸ் விளக்கியது போல, முதலாளித்துவத்திற்கு முன்பே தோன்றியது தனிச்சொத்து; தனிச்சொத்து மீதான ஆதிக்கத்தின் வடிவங்கள் ஆணாதிக்கத்தின் பண்புகளை வடிவமைப்பதில் பங்காற்றின.

இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் தொடக்க கால போராட்டங்களின் மூலம் ஆணாதிக்கத்தின் கோர முகம் அம்பலமாக்கப்பட்டது. தானே மாவட்டத்தின் 'லங்கா காடி' இயக்கம் இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். பல மூத்த தலைவர்கள் கூறுவது போல், 'லங்கா காடி' பண்பாடு என்பது மேட்டுக்குடி பண்ணையார்களின் மிக்க கொடுமையான வர்க்க ஒடுக்குமுறை; திருமண சமயத்தில் கடனாளியாக ஆன சிறு விவசாயிகளுடைய மனைவியர்கள் அடிமைகளாக வைத்துக்கொள்ளப்பட்டனர். இந்த இயக்கத்தின் முக்கிய இலக்கே பண்ணையார்களின் வீட்டிற்குள்ளேயே சென்று பெண்களை விடுதலை செய்வது தான். இது கடந்த நூற்றாண்டின் மாபெரும் போராட்டம். ஆணாதிக்க எதிர்ப்பே இந்த வர்க்க போராட்டத்தின் அடிப்படையாக இருந்தது. கொடூரமான சமூக பண்பாட்டை ஒழித்துக்கட்டிய முக்கியப் போராட்டம் இது (பிரசாத் 2017, பக். 27). வர்க்க உறவுகளில் ஆணாதிக்கம் உள்ளடங்கி இருப்பதை கோதாவரி பாருலேகர் விரிவாக எழுதுகிறார்:

> குத்தகை விவசாயிகள் மற்றும் கடனாளி அடிமைகளின் மனைவிகளை பண்ணையார்கள் தங்களின் தனிச்சொத்தாக கருதினர் . அவர்கள் விரும்பும்போதெல்லாம் இந்த பெண்களை அனுபவிக்க அவர்களுக்கு பிறப்புரிமை இருப்பதாக உறுதியாக நம்பினர் . அவர்களிடம் பணிபுரியும் பெண்களிடம் ஆபாசமாக பேசுவது , அவர்களை தொடுவது , கிள்ளுவது , தள்ளுவது , தனியே இழுத்துச் சென்று களங்கப்படுத்துவது , அனைத்தும் அவர்களுக்கு சாதாரண வழக்கமாக இருந்தன ... பண்ணையார்களும் , வன ஒப்பந்ததார்களும் அவர்களின் இச்சைக்காக பெண்களை துன்புறுத்தினார்கள் . பண்ணையார்கள் பழங்குடிப் பெண்களை தகாத உறவினுள் தள்ளுவது எவ்வளவு சாதாரணமாக இருந்ததென்றால் , இந்த தகாத உறவினால் பிறந்த குழந்தைகளுக்கு சிறப்பு சொல்லாடலே உருவாக்கப்பட்டது . "வட்லா "என்ற தனி சாதிப்பெயருடன் அவர்கள் அழைக்கப்பட்டனர் . இந்து , இந்து -அல்லாத அனைத்து பண்ணையார்களுக்கும் இவ்வாறு பிறந்த வாரிசுகளுக்கு இப்பெயர் சூட்டப்பட்டது .

வர்க்க ஒடுக்குமுறையின் விளைவாக ஒரு புதிய சாதி உருவாக்கப்பட்டது, இங்கே அதிக கவனத்தை ஈர்க்கக் கூடியதாகும். வர்க்க ஒடுக்குமுறையின் பல வடிவங்களின் வெளிப்பாடே சாதிய ஆணாதிக்க முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பதை இது உணர்த்துகிறது. இது போல வர்க்க ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆணாதிக்கம் பயன்படுத்தப்பட்டதற்கான பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. பெண்கள் உழைக்கும் வர்க்கமாக்கப்படும்போது, அவர்கள் வீட்டிலும், பொது வெளியிலும் ஒடுக்கப்பட்ட வர்க்க நிலையில் இருந்தார்கள் என்பதையும் உள்ளடக்கிப் பார்க்க வேண்டும். எனவேதான் 'மார்க்சிய எழுத்துக்களில்' பெண் விடுதலை குறித்த பிரச்சனைகள், உழைக்கும் வர்க்க விடுதலையோடு நெருங்கிய தொடர்புடையவையாக அமைகின்றன. (கொலந்தாய் [1946] 2017; ஃப்ரெட்ரிக்கி 2004).

எதிர்ப்புப் போராட்டங்கள் மீதான முதலாளித்துவத்தின் கொடூரமான அடக்குமுறைகளில் ஆணாதிக்கத்திற்கும் வர்க்கத்திற்குமான நெருங்கிய தொடர்புகள் வெளிப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், வல்லுறவுகளும் எழுச்சிகளை முறியடிப்பதற்கான கருவிகளாக பயன்படுத்தப்பட்டன. வர்க்க அரசின் ஒடுக்குமுறையை பெண் போராளிகள் துணிவுடன் எதிர்கொண்டார்கள். ஒரு முக்கிய உதாரணத்தை சுத்தரைய்யா அளிக்கிறார்:

கார்லாவில் ஒரு 15 வயது இளம் பெண் பிடித்து விசாரிக்கப்படுகிறார்: "வீட்டிலிருந்து ஓடுவது யார்" (அவர் அந்த வீட்டில் தஞ்சம் அடைந்த முக்கிய தோழர்). அப்பெண் உடனடியாக அவர் தம் கணவரென்றும், போலீசால் அச்சமுற்று ஓடுவதாகவும் கூறினாள். போலீஸ் அவளை நம்பாமல், அவரை அடித்து வன்புணர்வுக்கு ஆளாக்கினார்கள். அனால் அவள் எந்த இரகசியத்தையும் சொல்லவில்லை (சுந்தரைய்யா 1972, பக். 255).

இலா மித்ரா சிறையிலடைக்கப்பட்டபோது, அவர் ஒரு பெண் என்பதையும், சந்தால் இனத்தைச் சேர்ந்தவர் என்பதையும் தொடர்ந்து போலீசார் நினைவுபடுத்திக் கொண்டே இருந்ததை பதிவு செய்துள்ளார் (பஞ்சாபி 2017, பக். 200-01). 1940களின் மத்தியில், வார்லி போராட்டத்தின் பொழுது, பெண்கள் தற்காப்புப் படைகளை அமைத்து ஆண் தோழர்களை போலீசாரிடம் இருந்து காப்பாற்றிய பல தருணங்கள் உள்ளன. உதாரணமாக, கைது செய்யப்படுவதைத் தவிர்க்க பகல் நேரங்களில் ஆண்கள் மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்து கொண்டபோது, பெண்கள் போலீஸ் அராஜகங்களை எதிர்கொண்டனர். அவர்கள் போலீசின் இருப்பிடத்தை பற்றி ஆண்களுக்கு இரகசியமாக தகவல் அனுப்பியதோடு, போலீசாரையும் குழப்பி விட்டனர். முக்கியமாக, அவர்கள் போலீசாரின் அராஜகத்தையும், பண்ணையார்களின் அராஜகத்தையும் எதிர்த்தனர் (பிரசாத் 2017, பக். 37). ஆணாதிக்க அதிகாரம், வர்க்க ஒடுக்குமுறையோடு பிணைந்த ஒன்றே என்பதை ஆரம்ப கால வர்க்கப் போராட்ட தன்மைகள் நமக்கு காட்டுகின்றன.

கம்யூனிசத்தின் விடுதலைச் சிந்தனையே ஆணாதிக்கத் தன்மை கொண்டது என்று பெண்ணிய விமர்சகர்கள் வகைப்படுத்துகின்றனர் (பஞ்சாபி [2017] எ.கா. பார்க்க). அனால் அவர்கள் இந்த வரலாற்று உண்மைகளை கணக்கிலெடுக்க மறுக்கின்றனர். பெண்களின் 'தனிப்பிரச்சனை' அரசியலாக்கப்பட்டதாலும், 'தனிப்பிரச்னை' மற்றும் 'பொதுப்பிரச்சனை' இடையேயான எல்லைகளை கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான போராட்டங்கள் மங்கச் செய்தன. இவை பெண்களின் வாய்ப்புகளை அதிகரித்து, தடைகள் தாண்ட வழிவகுத்தது, கூடுதல் உரிமைகளுக்காக போராடவும் முடிந்தது. கம்யூனிச பெண்களின் சுயசரிதைகளும் அவர்கள் கம்யூனிஸ்டுகளாக ஆன பொழுது எழுந்த தடைகளைப் பற்றியும், அவற்றை உடைக்க அவர்கள் பாரம்பரிய குடும்பங்களிலிருந்து வெளியேறி வந்ததைப் பற்றியும் கூறுகின்றன. இந்நேரங்களில் இயக்கமே அவர்களின் குடும்பமாக மாறியது, சுதந்திர

அடையாளமும், இடமும் பெற வழிவகுத்தது (மரிக் 2013). 1940களில் துவங்கி அகில இந்திய மகளிர் மாநாட்டில் கம்யூனிச பெண்களின் உயிரோட்டமான பங்கேற்பும், பின் 1953ல் தேசிய இந்திய மகளிர் சம்மேளனம் உருவானதும் பெண்கள் இயக்கத்தில் வளர்ந்து வந்த கம்யூனிஸ்டுகளின் தாக்கத்தை உணர்த்துகின்றது. இவை அனைத்தும் பெண்களின் கோரிக்கைகளை, குறிப்பாக சம ஊதியம், குழந்தை மற்றும் மகப்பேறு கால நலன் போன்றவற்றை வர்க்க போராட்டத்தின் பரந்துபட்ட கட்டமைப்பினுள் கொண்டு வர கட்சியின் தலைமைக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது (ஆர்ம்ஸ்ட்ரோங் 2013, பக்.30-34). பெண்களுக்கான தனி அமைப்புகள் இந்த பணியை தொடர்ந்து செய்து வருகின்றன.

இவை அனைத்தையும் சொல்வது கம்யூனிஸ்ட் அமைப்புகளுக்குள் சவால்களே இல்லை என்ற புரிதலில் அல்ல. கம்யூனிச கோட்பாட்டாளர்கள் சமகால மார்க்சிய தத்துவக் கருவிகளை பயன்படுத்த வேண்டும். முதலாளித்துவ அமைப்பினில், (வர்க்கம் போன்ற) மேலிருந்து கீழான அதிகாரப் படிநிலைகளுக்கும், (ஆணாதிக்கம், சாதி போன்று) கிடை இருத்தப்பட்டுள்ள காரணிகளுக்கும் இடையிலான இயக்கவியல் அடிப்படையிலான கொடுக்க வாங்கலை ஆய்வு செய்திட வேண்டும். வர்க்கங்களின் உருவாக்கத்தின்போது, திட்டமிட்ட ஒடுக்குமுறைகள் இணைந்து முன்னெடுக்கப்பட்டதை விளக்கும் வகையில் சமூக மறு உற்பத்தி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். ‘குறுக்குவெட்டுத்தன்மை’ (‘intersectionality’) என்ற ஜனரஞ்சக கோட்பாட்டினால் இந்தப் பிரச்சனை விளக்கும்போது போதாமையே மிஞ்சுகிறது. ஏனென்றால் அது சமூக உற்பத்திக்கு வெளியே ஆணாதிக்கத்தை நிறுத்துகிறது. (பார்க்க ஜான் [2014]). இதற்கு நேர்மாறாக, மார்க்சிய கோட்பாட்டின் சமகால வளர்ச்சிகளைக் கொண்டு இந்த உறவினைப் புரிந்துகொள்வதற்கான வழிமுறைகளை பெற முடியும். பொருளியல் வாழ்விற்கும், மேல் கட்டுமானத்திற்கும் இடைமுகத்தில் ஆணாதிக்கத்தை அது காண்கிறது. எனவே பல சிக்கலான உறவு நிலைகளையும் நாம் விளக்கிட முடியும். (உதாரணங்களுக்கு பார்க்க வோகெல் 2013, பட்டாச்சார்யா 2017)

மேற்சொன்ன நிலையில் தத்துவ ஆய்வினை வளர்த்தெடுக்க வேண்டும். அப்போது வர்க்கங்களின் உருவாக்கமும், மறு உற்பத்தி நடவடிக்கையும் ஆணாதிக்கம் மற்றும் இதர சமூக நிறுவனங்களால் தாக்கம் பெற்றிருப்பது பற்றி நமக்கு கூடுதல் தெளிவு கிடைக்கும். அவ்வாறான பயிற்சி ‘தீவிர’ பெண்ணியவாதிகளுக்கும், ‘சோசலிச/மார்க்சிய' பெண்ணியவாதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் களைந்து

முதலாளித்துவத்திற்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டங்களை தீவிரப்படுத்த உதவிடும்.

- தமிழில்: அபிநவ் சூர்யா

சொல்லகராதி

அறுதி உபரி மதிப்பு & சார்பு உபரி மதிப்பு

கே.சுவாமிநாதன்

உபரி மதிப்பு எவ்வாறு உருவாகிறது, அது மூலதனக் குவியலுக்கு வழி வகுக்கிறது என்பதை கடந்த மாதங்களில் இப் பகுதியில் கண்டோம். முதலாளித்துவ உற்பத்தி முறைமையில் உபரி மதிப்பின் விகிதத்தையும், அதன் குவிப்பையும் அதிகரிப்பதற்கான தொடர்ந்த முனைப்பு இருந்து கொண்டே இருக்கும். உபரி மதிப்பு அதிகரிப்பை அது இரண்டு வழிகளில் செய்யும். ஒன்று அறுதி உபரி மதிப்பு (Absolute Surplus Value). இன்னொன்று சார்பு உபரி மதிப்பு (Relative Surplus Value).

அறுதி உபரி மதிப்பு என்றால் என்ன?

வேலை நாளை நீட்டிப்பதன் மூலமாக முதலாளித்துவம் உபரி மதிப்பை குவிப்பது ஒரு வழி. இவ்வாறு குவிக்கப்படும் உபரி மதிப்பையே அறுதி உபரி மதிப்பு (Absolute Surplus) என்கிறோம். தற்போது கூட இந்தியாவின் பல மாநில அரசுகள் 8 மணி நேர வேலை நாளை 12 மணி நேர வேலை நாளாக அதிகரிக்கிற முடிவை மேற்கொண்டன. உதாரணத்திற்கு தொழிலாளரின் அவசிய சமுக உழைப்பு நேரம் 4 மணி என்றால் 8 மணி வேலை நாளில் தொழிலாளர் 4 மணி நேரம் கூலி உழைப்பையும் 4 மணி நேரம் உபரி உழைப்பையும் வழங்குகிறார் என்று அர்த்தம்.

எளிமையாக சொல்வதானால் 4 மணி நேரம் தனக்காகவும், 4 மணி நேரம் முதலாளிக்காகவும் வேலை பார்க்கிறார். இப்போது வேலை நாள் 12 மணியாக நீட்டிக்கப்பட்டால். தனக்காக உழைக்கிற 4 மணிக்கும் மேலாக 8 மணி நேரம் முதலாளிக்காக உழைத்து கூடுதல் உபரி மதிப்பை உருவாக்கித் தருகிறார் என்பதே பொருள்.

8 மணி நேர வேலையை விட 12 மணி நேர வேலைக்கு அதிக கூலி கிடைக்குமே என்று அப்பாவித்தனமாக தொழிலாளர்கள் நினைக்கக் கூடும். இதுவே முதலாளித்துவவாதிகளின் பசப்புமாகும். ஆனால் உண்மை என்ன? போதுமான ஓய்வும் பொழுது போக்கும் இல்லாத வாழ்க்கை, தொழிலாளர் உடல் நலத்தின் மீது உயிர் வாழும் காலத்தின் மீது, அவர் குடும்பத்தின் மீது என்ன பாதிப்புகளை ஏற்படுத்தும்? இந்த விவாதம் புதிதல்ல. காரல் மார்க்ஸ் "கூலி விலை லாபம்" நூலில் (1865 ல் நிகழ்த்திய உரை) அவர் பேசுகிறார்.

"வேலை நாளை நீட்டி முதலாளிகள் கூடுதல் கூலி கொடுத்த போதும்.... பிழிந்தெடுக்கப்படும் கூடுதல் உழைப்பின் அளவிற்கும் அதனால் உழைப்பு சக்திக்கு (தொழிலாளிக்கு) ஏற்படும் சேதாரத்திற்கும் ஈடாக கூலி உயர்வதில்லை. முதலாளித்துவ புள்ளியியல் நிபுணர்கள், லங்காசயர் ஆலைகளில் தொழிலாளர்கள் குடும்பங்களில் சராசரிக் கூலி உயர்ந்து விட்டது என்று உங்களுக்கு கூறுவார்கள். ஆனால் குடும்பத் தலைவனான ஆடவன் மட்டுமின்றி அவனுடைய துணைவி, மூன்று அல்லது நான்கு குழந்தைகளும் கூட இப்போது மூலதனத்தின் தேர்ச் சக்கரங்களுக்கு அடியில் எறியப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், மொத்தக் கூலி உயர்வு அந்த குடும்பத்திலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட மொத்த உபரி உழைப்பிற்கு ஈடாகவில்லை என்பதையும் அவர்கள் மறந்து விட்டார்கள்" என்று வேலை நாள் நீட்டிப்பால் அறுதி உபரி மதிப்பை அதிகரிக்கும் சுரண்டலை இவ்வாறு விவரிக்கிறார்
மார்க்ஸ்.

"சார்பு உபரி மதிப்பு" என்றால் என்ன?

இயந்திரங்களின் பயன்பாட்டை, தொழில் நுட்ப மேம்பாட்டை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது உபரி மதிப்பின் விகிதமும், குவிப்பும் அதிகரிக்கும். இதுவே **"சார்பு உபரி மதிப்பு"** எனப்படுகிறது. மேலே சொன்ன உதாரணத்தின்படி தொழிலாளி 4 மணி நேரம் தனக்காகவும், 4 மணி நேரம் முதலாளிக்காகவும் வேலை பார்க்கிறார். இப்போது இயந்திர பயன்பாடு அதிகரிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். தனது உழைப்பு சக்தியை மீண்டும் மறு உற்பத்தி செய்து கொள்வதற்கான "அவசிய சமூக உழைப்பு நேரம்" 3 மணி நேரமாக குறைந்து விடும். அதாவது 3 மணி நேரத்திற்குள்ளாகவே அவர் உயிர் வாழ, உடல் நிலையை பராமரிக்க, குடும்பத்தையும் பராமரிப்பதற்கானவையின் மதிப்பிற்கு ஈடானதை 3 மணி நேரத்திலேயே உற்பத்தி செய்து விடுகிறார். ஆகவே முன்பு 4 மணி நேரமாக இருந்த கூலி உழைப்பு தற்போது 3 மணி நேரமாகக் குறைந்து விடுகிறது. முதலாளிக்கான உபரி உழைப்பு 4 மணி நேரத்தில் இருந்து 5 மணி நேரம் ஆக

உயர்ந்து விடுகிறது. இவ்வாறு அதிகரிக்கும் உபரி மதிப்பின் விகிதமும், குவிப்புமே **சார்பு உபரி மதிப்பு** எனப்படுகிறது.

இயந்திர பயன்பாட்டிற்கான முனைப்பு முதலாளித்துவத்தின் இயல்பு என்பதை "கூலி உழைப்பும் மூலதனமும்" நூலில் (1849) காரல் மார்க்ஸ் விவரிக்கிறார். "மூலதனங்களது எண்ணிக்கை பெருக்கம் முதலாளிகளிடையே போட்டிகளை அதிகரிக்கிறது... பிரம்மாண்டமான போர்க் கருவிகள் கொண்டு வலிமை வாய்ந்த உழைப்பு சேனைகளைத் தொழில் போர்க் களத்தில் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளையும் அளித்திடுகிறது." இது பெரு விகித உற்பத்திக்கு வழி வகுக்கிறது. உபரி மதிப்பை இடையறாது குவித்துக் கொண்டே போகிறது. **"உழைப்பின் உற்பத்தி திறனை தீவிரமாக்கிச் செல்லும்படி மூலதனத்தை பலவந்தம் செய்கிறது... இந்த விதிதான் மூலதனத்திற்கு சற்றும் ஓய்வு அளிக்காமல் இன்னும் போ! இன்னும் போ! என்று விடாமல் அதன் செவிகளுக்குள் கூறி உசுப்பிய வண்ணம் உள்ளது."** என்கிறார் மார்க்ஸ். இன்றைய செயற்கை அறிவூட்டல் (AI- Artificial Intelligence), பெருந்தரவு (Big data) போன்ற நவீன தொழில் நுட்ப பரவல் யுகத்தில் **"சார்பு உபரி மதிப்பு"** மூலதனம் மையமாதலுக்கும் குவிவதற்கும் பெருமளவு வழி வகுக்கிறது. ஒரே நேரத்தில் வேலை நாள் நீட்டிப்பும், தொழில் நுட்ப மேம்பாடும் கட்டவிழ்த்து விடப்படுவது இப்போக்கை மேலும் விரைவாக்குகிறது.